# சிரித்திரன்







T. THAMBITHURAI & SONS
News Agents & Book Sellers
JAFFNA & COLOMBO 4

பார்வை குறைந்த வேட்பாளர்: தேர்தலில் நிற்கிறன். உங்க வோட்டை... ஹிஹி ஹீ

கார்த்திகை 1969

45 சதம்.

# "எம்பீ இன்டஸ்ரீஸ்"

நெசவாளர்களும், நெசவு நூல் சாயம் தீட்டுபவர்களும்.

பள்ளன் சேனை, கொச்சிக்கடை, கொழும்பு.


"நான் உங்க வீட்டுப்பிள்ளை
இது ஊரறிந்த உண்மை"
"பரமேஸ்வரி ராஜேஸ்வரி
ஜகதீஸ்வரி பாகேஸ்வரி
நல்வாக்கு தருவாயடி"
"யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க"
"சிரிக்காத வாயும்
சிரிக்காதோ"
STUDIO

# சிரித்திரன்

கார்த்திகை 1969

நகை: 6

சுவை: 1





சிறப்பு அம்சங்கள் பல, பல, பல, பல. ஆண்டு மலரை யார் வாசிப்பதென்பதில் போட்டி மனஸ்தாபம். எனக்கும் ‘அதுக்கும்’ வாசித்துச் சிரித்தால் இப்போது சகஜ நிலை. சுருங்கச் சொன்னால் குறைந்த விலை, நிறைந்த அம்சங்கள்.

—திருமதி யுகலெட்சுமி, கண்டி வீதி, பேலியகொடை

ஐந்தாம் ஆண்டு மலர் பூரணத்துவம் பெற்று விளங்குகிறது. ஸவ்யஸாசியின் ‘ஹோ’ என் போலவே பலருள்ளத்தை கிரங்க வைத்திருக்கும் என்று நம்புகிறேன். மற்றும் நிலவைப் பிடித்து, விவாகரத்து யாவும் நல்ல தரம். காதல் பல்டி எதிர்பார்த்த முடிவு. ஆச்சியின் பயணத்தை எதிர்பார்க்கிறேன்.

—கண; மஹேஸ்வரன், கரவெட்டி.

துன்பத்திலுள்ளவர்களைச் சிரிக்க வைக்கும் சேவையை நன்றாகச் செய்கிறான் சிரித்திரன். வாழ்க!

—எம். எஸ். நசீர், முகைதீன் பள்ளி வீதி, யாழ்ப்பாணம்.

எல்லாம் நிறைந்து, எவர்க்கும் பொதுவாய் எக்காலத்துக்கும் ஏற்ற சிரித்திரனை என்னவென்று சொல்ல. எல்லாமே நன்கு அமைந்துள்ள ஆண்டு மலரில் எதைப் புகழ்வது, எதை விடுவது.

—ஏ.சி. எச். எம். மஹ்ரூப், அக்குரணை.

சிரிப்பது, சிந்திப்பது இவை பேர்லி எனக் கூறும் அழு மூஞ்சிகளுக்கு ஒரு சவால். வாழ்க சிரித்திரன்.

—வே. நாதன், வட்டக்கச்சி.

## மிஸிஸ். டாமோடிரன்




Mrs. டா: டார்லிங்... .. வெடிங் வீட்டிலே என்னை ஆலாத்தி எடுக்கச் சொன்னால் நான் என்ன செய்யிறது...?

Mr. டா: பரவாயில்லை... எடுத்து சாப்பிடும்...

அன்பனே!

உன்னை யாராவது புகழும் போது மகிழ்ச்சியடையாதே; அதேபோல் உன்னை இகழும் போது கவலையுமடையாதே; இகழையும் புகழையும் சமமாகக் கருது; அதனால் உன் மனது அமைதியாக இருக்கும்.

—கிருபானந்தவாரி




ஆர் பரமு, கல்லடி.

கே: என்னுடைய எதிரியை அணுவணுவாக வருத்த என்ன செய்யவேண்டும்?

ப: ஒரு சாதனை செய்யும். உமது சாதனை அவன் வேதனை.

ஃ

இ. கீதம், கொட்டாஞ்சேனை.

கே: உண்மையான தியாகி யார்?

ப: பஸ்சில் தூர இடத்திற்குப் பிரயாணம் செய்யும்போது தன் ஆசனத்தை நிற்பவருக்குக் கொடுத்து, தான் எழும்பி நிற்பவர்.

ஃ

க. அச்சுதன், சங்கானை.

கே: எங்களுக்கும் காலம் வரும். காலம் வந்தால்?

ப: காலன் வருவான்.

ஃ

எம். எம். அபுபக்கர், மன்னார்.

கே: கல்வி என்னும் பயிருக்கு கண்ணீர் என்னும் மழை வேண்டும். காதல் என்னும் பயிருக்கு?

ப: அத்தர்.

ஃ

சி. பரமசிவம், தெனியாய.

கே: சுகாதார முறைப்படி வாழ முடியுமா?

ப: மாநகர சபை எல்லைக்கு அப்பால் வாழமுடியும்.

வி. உதயன், கண்டி.

கே: கொலைஞனுக்கும், கலைஞனுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: கொலைஞனைப் பொலிசார் தேடுவர். கலைஞனை யார் தேடுவார்? தேடுவாரற்ற பாவி.

ஃ

கு. வரதன், மட்டுநகர்.

கே: மூளையில்லாத் தலைவனை எதற்கு ஒப்பிடலாம்?

ப: மயிலுக்கு... தலை சிறிது, வால்கள் ஏராளம்.

ஃ

பாக்கியம் ஆனந்தன், கடுவலை.

கே: சிக்கனமாக வாழ வழி கூறும்?

ப: பல்கனி டிக்கட் எடுக்கப் பணம் இருந்தால் கலரி டிக்கட் எடும். கலரி டிக்கட் எடுக்கப் பணம் இருந்தால் தியேட்டருக்கு எட்ட நில்லும்.

ஃ

க. சிறீதரன், ஓமந்தை.

கே: நீர் உயர நெல் உயரும். புகழ் உயர...?

ப: பொறாமை உயரும்.

ம. குணசிங்கம், மருதானை.

கே: அரசியல்வாதி விவசாயியானால்?

ப: கதிர் பிடுங்கி களை வளர்ப்பார்.

ஃ

ரா. கந்தப்பு, மோதரை.

கே: இனிப்பில் தொடங்கி கசப்பில் முடிவது எது?

ப: சர்வகலாசாலைக் கல்வி

ஃ

எம். முத்து, பசரை.

கே: விழலுக்கு இறைத்த நீரை எதற்கு ஒப்பிடலாம்?

ப: விவேகமில்லா அரசியல்வாதிக்கு இறைத்த வாக்குச் சீட்டுகளுக்கு.

ஃ

செல்வி. ம. கல்யாணி, மாதகல்.

கே: இறந்தவர்களுக்குச் சிலை எழுப்புவதைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: இறந்தவர்களெல்லோருக்கும் சிலை எழுப்பிக்கொண்டு போனால் உயிரோடு உள்ளவர்கள் எங்கே ஐயா நிற்பது!

ஃ

ஹுசைன் முபாரக், கொழும்பு-12

கே: மனிதனுக்கு வாழ்வில் முக்கியமானது பணமா, பேனாவா?

ப: பேனா மேசையில், பணம் இரும்புப் பெட்டியில் தம்பி.

ஃ

க. அப்புசாமி, றத்தோட்ட.

கே: எமது அறிவு, ஆத்மா

# மாத்திரைக் கதை

## பக்குவம்

நெருப்பினால் சிவந்த சூட்டுக் கோல் கரடு முரடாக இருந்த காட்டு மூங்கிற் தடியில் துவாரங்களை ஏற்படுத்தியபோது அக்காயங்களைத் தாங்க முடியாமல் மூங்கில் தடி ரொம்பவும் வேதனைப்பட்டு அழுந்தியது. அப்போது அங்கு வீசிய காற்று, 'தோழா புண்கள் தாங்கி அழுந்துவதைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்படாதே!' என்று கூறியது.

மூங்கில் தடியைத் துவாரங்கள் புல்லாங்குழலாக மாற்றின. இனிமையான கீதத்தை அள்ளி இறைத்த குழலின் ஆற்றலில் உலகமே மயங்கி ஆடியது.

புல்லாங்குழலின் வரலாறு முழுவதும் தெரிந்த- எங்கும் வியாபித்திருக்கின்ற- தத்துவ ஞானாசிரியனான காற்றின் வாயிலிருந்து இரண்டு மணி வார்த்தைகள் உதிர்ந்தன:

'புண்பட்டவன் பண்பட்டவன்'

## வேஷம்

தூரத்திலே பாம்பொன்று தன் தோலைத் தானாகவே கழற்றி வீசிவிட்டு நகர்வதைக் கண்ட ஆமை தன்னுடைய நண்பனான தவளையைப் பார்த்து, 'நண்பா அதோ பார் அந்தப் பாம்பு தன்னுடைய தோலைக் கழற்றி எறிந்துவிட்டுப் புதிய பிறவி எடுத்திருக்கிறது. இனி அது உனக்கு ஒரு தீங்கும் செய்யாது. தாராளமாக நீ அதன் பக்கத்தில் போய் விளையாடலாம்' என்று கூறியது.

தவளைக்கு ஒரே மகிழ்ச்சி!

துள்ளிக் குதித்துப் பாம்புக்குப் பக்கத்தில் விளையாடப் போனது தவளை. என்ன கொடுமை... அடுத்த நிமிடமே பாவம் அது பாம்பின் வயிற்றுக்கு இரையாகிப் போயிற்று.

தூரத்தில் இருந்துகொண்டே இந்தக் காட்சியைக் கண்ட ஆமைக்குத் தலை சுற்றியது. 'ஆருயிர் நண்பனை அநியாயமாகப் பலி கொடுத்துவிட்டேனே!' என்று அது உரக்க அலறியது.

காட்டிலுள்ள ஏனைய நண்பர்களை எச்சரிக்கை செய்வதற்காக மணலில் நாலு வார்த்தைகளை எழுதிவைத்துவிட்டு மித்திர வேதனையால் சாவை அணைத்துக்கொண்டது ஆமை.

ஆமை எழுதிய வாசகம் இதுதான்:- 'பாம்பு தோலைக் கழற்றுவதால் பரிசுத்தவான் ஆவதில்லை.'

— காசி ஆனந்தன்.

ஈடேற்றத்திற்கு வழி யாதோ மகுடி மா முனியே?

ப: பேராதனையில் சர்வ கலாசாலை மூடப்பட்டிருக்கிறது, யாழ்ப்பாணத்தில் கோயில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அடியேன் யாதும் அறியேன்.

ஃ

ம. அரன், ஓமந்தை.

கே: சாராயத்தை யார் கண்டுபிடித்தார்கள்?

ப: சாராயத்தால் முகம் கழுவுபவரைக் கேட்டுப் பதில் கூறுகிறேன்.

ஃ

செல்வி; ராஜம் வெள்ளையன், சிமற்றி ரோட், கண்டி.

கே: இலங்கைத் தமிழ் சினிமா முன்னேற வழி?

ப: கலை உள்ளவரிடம் பணமில்லை. பணமுள்ளவரிடம் கலை இல்லை... எப்படி முன்னேற முடியும்.

ஃ

ம. செந்தில், அம்பாறை.

கே: அன்றைய தமிழன் சீருடன் வாழ்ந்தான். இன்றைய தமிழன் சீர்கெட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

ப: அன்றைய தமிழன் கப்பலோட்டினான்.

ஃ

ந. நடராஜா, வேலணை.

கே: கடவுள் நம்பிக்கை தோன்றிய காரணம் என்ன?

ப: மனிதனில் நம்பிக்கை இல்லாதபடியால்.

ஃ

கண்மணி பரமசிவம், திருமலை.

கே: இலங்கைவாழ் தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன?

ப: மூச்சு... நித்திரையில் புலம்புவதைக்கூட டேப்ரைக் கோட்டில் பதிவு செய்யும் காலம் விரைவில் வரும்.

# ஆச்சி பயணம் போகிறாள்

—செங்கை ஆழியான்—

### பயணவுரை

பழைமையின் அறியாமையையும், புதுமையின் அவலத்தையும் பாத்திரங்களாக்கி, நகைச்சுவையோடு கூற எடுத்த முயற்சியின் விளைவே 'ஆச்சி பயணம் போகிறாள்' என்ற இந்த நவீனம். உண்மையைக் கற்பனையாக்கியிருக்கின்றேன். யாழ்ப்பாணச் சூழலில், கிணற்றுத் தவளையாக வாழ்ந்த ஒரு கிழவி யாழ்ப்பாணத்திற்கு வெளியே உள்ள உலகத்தைக் காணும்போது ஏற்படும் உணர்வுகளை இதில சித்தரிக்கின்றேன்.

இந்த நவீனத்தில் நகைச்சுவையோடு, புவியியல், வரலாற்று உண்மைகளையும் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஒரு வகையில் இது 'பயண' நாவல்தான். இந்த நாவலிற்கு ஓவியர் 'செள'வின சித்திரங்கள் சிறப்பைத் தருகின்றன. 'செள' என் அன்பிற்கும் நன்றிக்குமுரியவர்.

நூலுருவில் வெளிவந்த ஈழத்தின் முதலாவது நகைச்சுவை நவீனம் இதுவே. 'சிரித்திரன்' மூலம் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை இந் நூல் பெற்றுக்கொள்கிறது. அத்தகைய அரிய வாய்ப்பைத் தந்த 'சிரித்திரன்' ஆசிரியருக்கு எப்படி நன்றி கூறுவேன்?

—செங்கை ஆழியான்.

## (1)

ஆச்சியின் அறுபத்தொன்பது வயது ஆசை அன்றுதான் நிறைவேறப்போகின்றது.

இரண்டு மணிக்கே ஆச்சி தயாராகிவிட்டாள்.

'ஏன்ரா ராசா, நாங்கள் கொஞ்சம் கெதியாக றெயிலடிக்குப் போனால் என்ன? எல்லாத்துக்கும் நல்லதல்லே?'

'சும்மா சத்தம் போடாது இரணை, ஆச்சி! ஆறு நாப்பதுக்குத்தான் றெயின். இரண்டு மணிக்குப் போய் அங்க தூங்கிறதே?' என்று சத்தம் போட்டான் ஆச்சியின் கடைசி மகன்.

'இல்லையடா, சில நேரம் அவங்கள் றெயிலைக் கெதியா விட்டாலும் விட்டிடுவாங்கள்...' என்றாள் ஆச்சி.

ஆச்சிக்கு அன்று மட்டில்லாத சந்தோஷம்.

'அப்பாடா, கதிரமலையான் இப்போதுதான் தன்னைக் கும்பிட என்னை அழைக்கின்றான்...' என்று அடிக்கடி கூறிக் கொண்டாள்.


பக்கத்து வீட்டுப் பொன்னம்மாக் கிழவிக்கு ஆச்சி கதிர்காமம் போகப்போகிற சங்கதி தெரிந்ததும் முகம் கறுத்துவிட்டது. 'தான் பார்க்கிறதுக்கு முன் இவ பார்க்கிறதோ?' என்ற அசூசை கிழவிக்கு.

'ஏன் செல்லாச்சி, இந்த வயதிலை உனக்கு இந்த எண்ணம்? பிரயாணம் உடம்புக்கு ஒத்து வருமே? காடு, மலை கடந்து போகவேணும். ஆனையளெல்லாம் குறுக்கை நிற்குமாம். அப்பிடித்தான்...சீனியர் வீட்டுச் சுப்பிரமணியம் கதிர்காமத்திற்குப் புறப்பட்டுச் சென்றது...வழியிலை பத்துப் பன்னிரெண்டு ஆனைகள் குறுக்கயாம். தப்பிப் போனது பெரும்பாடாம். ஆனைக்காடு...'

பொன்னம்மாக் கிழவி சொன்ன இந்தச் சங்கதியைக் கேட்ட ஆச்சிக்குக் கலக்கம் பிறந்துவிட்டது.

'ஏன்ரா ராசா, போற வழியெல்லாம் ஆனை நிக்குமாமே? அப்பிடிக் காட்டுக்குள்ளேயே அப்பன் இருக்கின்றான்... ஆனை வந்தால் ஓடவும் முடியாதடாப்பா.'

'அது முந்தித்தானணை... இப்ப கதிர்காமக் கோயில் வாசலுக்கு முன்னாலேயே பஸ் போய் நிற்குது...பேந்து என்ன பயம்... அது இப்ப ரவுனல்லோ'



ஆனையள் குறுக்கை நிக்குமாம்.

'ஏதோ காட்டுக்குள்ளாலை முப்பது நாப்பது மைல் நடக்க வேணுமாமே?' என்று அடுத்த சந்தேகத்தைக் கிளப்பினாள்.

சிவராசாவிற்கு எரிச்சலாக வந்தது; அடக்கிக்கொண்டான்.

பாவம் ஆச்சி. யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே ஒருக்காலும் சென்றறியாத கிணற்றுத் தவளை.



'அதுவும் முந்தித்தான் ஆச்சி, திசமாறகமத்திலிருந்து, கோயிலுக்குக் காட்டுக்குள்ளேயே நடந்து போகணும். இப்ப ரோட்டெல்லாம் போட்டு பஸ்களும் ஓடுது. நேரே போகலாம்.'

'ஆற்றை கமத்திலை இருந்து என்றனி...?' எனறு குறுக்கிட்டாள் ஆச்சி.

செல்லாச்சி ஆச்சி கதிர்காமம் போகப்போகிற விஷயம் வண்ணார்பண்ணை எங்கும் புத்தீசல் போலப் பரவிவிட்டது. பலர் ஆச்சியை விசாரிக்க வந்தார்கள்.

'இந்தக் காசுக்கு ஒரு அருச்சனை செய்துகொண்டு வந்திடனை மறந்திடாமல்,' எனறு ஒரு ரூபாயை ஆச்சியிடம் கொடுத்தாள் சிவநாதனின் பேத்திக் கிழவி.

'ஒரு ஐம்பது தேங்காய் கந்தனுக்கு உடைக்கிறதென்று போன வருஷம் நேர்த்தனான். என்ரை மூத்தவன் சாகக்கிடந்தவளல்லே. அப்ப நேந்தனான். தேங்காய் வாங்கித்தாறன்... கொண்டுபோய் ஒருக்கா உடைச்சு விட்டிடணை' என்று ஐம்பது தேங்காய்களுடன் வந்திறங்கினார் சுருட்டுக்காரச் சின்னத்துரை.

தேங்காய் மூட்டையைக் கண்டதும் சிவராசாவிற்குத் திக்கென்றது. யார் காவுகிறது?

'தேங்காய்களைக் கொண்டு போகிறது கஷ்டம், அம்மான் நீங்க காசைத் தாங்கோ, அங்கை வாங்கி உடைச்சுவிடுறன்!'

'இல்லைத் தம்பி, அங்கை காட்டுக்குள்ளை எங்கை தேங்கா கிடைக்கும். கிடைச்சாலும் ஆனைவிலை குதிரை விலையாக இருக்கும்...' என்றார் சின்னத்துரை அம்மான். அவர் சொன்னது ஆச்சிக்குச் சரியாகக் காதில் விழவில்லை.

'ஓமோம்... அங்கினேக்கை ஆனையள் கூடத்தானும்' என்றாள்.

கதிர்காமத்திற்கு வருடா வருடம் சென்றுவந்த தையல்முத்து அன்றைக்கு என்று ஆச்சியைப் பார்க்க வந்தாள்.

'கதிர்காமத்துக்குப் போனால் நிச்சயமாக மலைக்குப் போக வேணும். மலை ஏறுவது இந்த வயசிலை உனக்கெணை கஷ்டமாக இருக்கும்.. ஐந்தாறு வருஷம் முந்திப் போயிருக்கலாமே?' ஆச்சிக்குத் தையல்முத்துவின் வார்த்தைகள் மனதைக் கிளறிவிட்டன.

'நானும் நாலு மல்லரைப் பெத்தன். ஆர்தான் இவ்வளவு காலமும் கூட்டிக்கொண்டு போனாங்கள்... ஏதோ இப்பவாவது என்ரை கடைக்குட்டி கூட்டிப் போகுதே...'

'கதிர்காமத்துக்குப் போனால் புருஷனோடு தீர்த்தமாட வேணும் அல்லது கடைசிப் பிள்ளையோடை தீர்த்தமாட வேணும்...' என்று விரித்துரைத்தாள் தையல்முத்து.

தையல்முத்து தனது கதிர்காம அனுபவங்களை ஆச்சிக்கு கூட்டியும் குறைத்தும் எடுத்துரைத்தாள். ஆச்சிக்கு வியப்பாயும் பயமாயும் இருந்தது.



ஒரு ஐம்பது தேங்காய் கந்தனுக்கு

'முருகா, ஏதோ உன்னைத் தேடி வாறன். நீதான் துணை!' என்று வேண்டிக்கொண்டாள்.

தூரத்தே புகை வண்டி ஒன்றின் 'கூ...' என்ற அலறல் எழுந்தது.

'ஐயோ கோச்சி போகுதடா...' என்று பதறினாள் ஆச்சி'

'அது 'குட்ஸ்' வண்டியணை, மெயிலுக்கு இன்னும் நேரம் இருக்குது...' என்றான் சிவராசா.

(தொடரும்)

## சிரித்திரு

நேர்முகப் பரிட்சை என்ற பெயரில் டைபிஸ்ட் வேலைக்கு வருபவர்களிடம் ஆளுக்கு ஒரு கடிதத்தை 'டைப்' அடிக்கச் சொல்லி வருகிறது ஒரு கந்தோர்.

வேலை தேடி வருபவர்களுக்கு பஞ்சமில்லாதபடியால், டைபிஸ்ட்டுக்கு சம்பளச் செலவு இல்லாமல் தன் காரியாலய வேலை முடிந்துவிடுகிறது என்கிறார் அதிபர்.

# பாடல்களின் தலைப்பும் ஒய்யப்பங்கங்காணியாரின் மலைப்பும்



— குறிஞ்சிதாசன் —

ஆறு மனமே ஆறு- அந்த ஆண்டவன் கட்டளை ஆறு.

ஆறுன சஞ்சி பழஞ் சஞ்சீன்னு சொல்லுவாக. ஆனா நம்பூட்டு ஆண்டவன் செவபெருமான் ஆறுதலா இருப்பான்னு சொல்லிபூட்டாரு. இதுனாலத்தான் தமுழங்கள்லாம் ஆறுதலாக இருந்துட்டாங்க. இல்லாட்டி சந்துர மண்டலத்துக்கு அமரிக்க பயலுவ போறதுக்கு முன்னாடி நம்ம தமுழங்க தாய்யா சந்துர மண்டலத்துக்கு போயிருப்பாக. அப்புடி போயிருந்தா ஆம்ஸ்ரோங், எல்ரின், கொலின்ஸ் இவுகளுக்கு பதிலா செலநேரம் நானு... ஆமாய்யா ஒய்யப்பங்கங்காணியார், ஏகாம்பரம், கொழுந்து கணக்கப்புள்ள குப்புசாமி மூனுபேரும் போயிட்டு வந்திருப்போமில்லையா!

— + —

நீ போகுமிடமெல்லாம் நானும் வருவேன் போ...போ... போ...

ஒங்கிட்டெல்லாம் சொல்றத்துக்கு இன்னாய்யா வெக்கம்! அந்தக் காலத்துல... ஆமாய்யா பருவதாச்சியை கண்ணாலம் கட்டிக்கிட்ட புதுசுல... அவ எங்க போனாலும் சரிய்யா வுடுறதில்ல. நீ போற எடத்துக்கெல்லாம் நானும் வருவேன்னு சொல்லிக்கிட்டே அவ பின்னாடியே போயி ...லேசா அவளுக்கு ஒரு 'டச்' குடுத்து ஆள மடக்கிபுடுவேய்யா...! அப்புறம் இன்னாய்யா..? ஒரே கூத்துதான்! ஒரே கூத்து!! அதுவும் ஒரு காலந்தாய்யா...!

— + —

அடுத்தாத்து அம்புஜத்த பார்த்தேளோ அவ ஆத்துக்காரர் கொஞ்சறதக் கேட்டேளா

எங்கட அடுத்தாத்துல அம்புசம் வம்புசம் யாருமே கெடயாதையா. அம்போன்னு கெடக்குறு அய்யாகண்ணு வூட்டு பொண்டாட்டி அலமேலு கெழவி. அவளோ நோயில நொடிச்சி போயி இன்னிக்கோ, நாளைக்கோன்னு கெடக்குரு. அவளை போயி பாக்கறதுக்கு இன்னாய்யா கெடக்குது? அடேயெங்கப்பா, ராத்திரிக்கு 'லொக்கு... லொக்கூ'ன்னு இருமிக்கிட்டு மனுஷாலுக்கு படுக்க முடியாமே பெரிய ரோதனைய்யா. இந்த லெச்சணத்துல ஆத்துக்கார பய இன்னாத்தையா புடிச்சிக்கிட்டு கொஞ்சறது? அவன் தலவிதி ரெண்டு போத்த சுக்கு தண்ணிய போட்டுபுட்டு, அப்போன்னு புடிச்சிக்கிட்டு இருக்கவேண்டியதுதான். அவ 'லொக்கு... லொக்கு'தான்.

— + —


உன்னைக் கண்டு நான் ஆட
என்னைக் கண்டு நீ ஆட உல்லாசம்
பொங்கும் இன்பத் தீபாவளி...

இதுனா சோக்கான பாட்டுத்தாய்யா. தீவாளி அன்னிக்கு அடியாத்தா, நம்பூட்டு தோட்டம் படுற பாடு ஒரு பாடுதாய்யா. பட்டாசு இன்னா, மத்தாப்பு இன்னா, கேக்க வேணாய்யா கொண்டாட்டத்த. சாப்பாடு இன்னாங்கிறீங்க? கோழி அடிச்சி... நாலைஞ்சி பயலுவ சேந்து ரெண்டு போத்த சுக்கு தண்ணியயும் கொண்டாந்து ஒரு கதய குடுத்தா... ஆமாய்யா ஒவ்வொருத்தரும் சுக்குத் தண்ணில வெளயாடத் தொடங்கீட்டா.. அப்பரம் இன்னாய்யா... நேரா எங்கனைய்யா நிக்கிறது? என்னய கண்டு நீ ஆட ஒன்னய கண்டு நானாடன்னு ஆடிக்கிட்டு கெடக்கவேண்டிதுதான்.

— + —

ஆயிரம் நிலவே வா... ஓராயிரம் நிலவே வா...

அடயெங்கொப்புரானே... ஒரு நெலவு இருக்கக்கொலயே இந்த அமேரிக்க பாவீங்க அப்பாலவ வச்சிக்கினு அதுல போயி, இருக்கிற ஒரே சந்தரன இருக்கவுடாமே மண்ண நோண்டி எடுத்துக்கினு வந்துட்டாங்களே! இந்த ரோதனயே பெருசா இருக்கக்கொல ஆயிரம் நெலவு வந்தருச்சினா இந்தப் பயலுவ இன்னா செஞ்சிபுடமாட்டானுக. அப்பாலோ, அம்மாலோ, அக்காலோ, அண்ணாலோ, பாட்டாலோ, தாத்தாலோ எல்லாமில்ல செஞ்சிகினு போயீட்டு வந்துடுவானுக... அடயென்னா யெழவையா... மண்ணு நோண்டி எடுக்க இம்மாண்டு தூரமா போகனும்...? கொல்லபக்கத்துல இருந்து கொஞ்ச மண்ண எடுத்தா இன்னாவாம்? புத்திகெட்ட பயலுவ... புத்திகெட்ட பயலுவ!



# விதானையார்

ஒரு நாள் தமிழ் ஆசிரியர் நமக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கும்போது கடைசி வாங்கில் இருந்த ஒரு குண்டு மாணவர் ஆசிரியர் சொல்வதற்கெல்லாம் நக்கல் அடிப்பது போல் 'ஆமாம்' 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

தமிழ் ஆசிரியர் அந்த மாணவன் அருகில் புன்முறுவலுடன் சென்று, அவனைச் செல்லமாகத் தட்டி, 'மாணவர்களே! இந்த அறிவும் ஆற்றலும் நிறைந்த மாணவர் வருங்காலத்தில் ஒரு விதானையாய் வருவார்' என்று சொன்னார். ஏன் இவர் குண்டனுக்கு 'ஐஸ்' வைக்கிறார் என்று நாம் சிந்தித்தோம். 'ஆமாம் உண்மையாய் இவர் ஒரு வித ஆனையாய் வருவார்' என்று அறுத்து உறுத்து தமிழ் ஆசிரியர் சொன்னதுதான் தாமதம் எல்லா மாணவர்களும் கொல் என்று சிரித்தனர்.

பெண் பிள்ளைகளும் நமது வகுப்பில் இருந்தமையால் வயது வந்த குண்டுமாணவர் ஆசிரியரை முறைத்துப் பார்த்தான். ஆசிரியர் இதைச் சமாளிப்பது போல் 'மக்காள் சொற்கள் ஒன்றுசேரும் பொழுது ஒரு கருத்தையும் பிரிந்து நிற்கும்பொழுது வேறு கருத்தையும் கொடுக்கிறது' என்று சொல்லித் தொடர்ந்தார்.

—செ. செந்தில், 'மணி அகம்', சாவகச்சேரி.


Dealers in: New and retreaded Tyres, Rice, Curry -Stuffs, Oilman Goods and Poultry Foods.

Distributors for **CEYLON NUTRITIONAL FOODS LTD.**

**SEEDUWA STORES**

(Prop: V. Ramanathan)

GENERAL MERCHANTS

210, Seeduwa Junction,

SEEDUWA




கே. சேதுராமன், 61, மேல மாசி வீதி, மதுரை-1, இந்தியா.
[முத்திரை சேகரித்தல், முதல் நாள் உறை, நண்பர் தொடர்பு]

ஜி. எஸ். செல்வராஜ், சிக்னல் பகுதி, விமானப் படை நிலையம், ஜாம் நகர்-3, குஜராத் ஸ்டேற், வட இந்தியா.
[முத்திரை சேகரித்தல், பிற தேசங்களின் புதினப் படங்கள், செய்திகள், காட்சிப் படங்கள் சேகரித்தல்]

செல்வி. சோ. சந்திராதேவி, அணிங்கத்தை தோட்டம், தெனியாய.
[புத்தகங்கள் படித்தல், காட்சிப் படங்கள் சேகரித்தல்]

செல்வி. கே. கல்யாணி, நாகசேனை குரூப், லிந்துல.
[தையல், வானொலி கேட்பது, வரைதல்]

செல்வி. த. பத்மாவதி, துன்னாலை வடக்கு, போதரமடம், கரவெட்டி.
[வானொலி கேட்டல், சிறுகதை வாசித்தல்]

செல்வி. சுந்தரி கன்னையா, 47, பிரதான வீதி, தெனியாய.
[கதைப் புத்தகங்கள் வாசித்தல், தையல் வேலைகளைச் செய்தல்]

செல்வி. எம். வி. பாலகுமாரி, 41, ஹில் ரோட், நாவலப்பிட்டி.
[நடனம், வலைப்பந்து, முத்திரை, பட அட்டைகள் சேகரித்தல்]

செல்வி. டி. ஆர். செல்வராணி, 86, இருகலை பஜார், ஆள்கரனோயா. பி. ஒ.
[பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கடிதத் தொடர்பு]

செல்வி. பொ. ரட்னேஸ்வரி 485/6, தெமட்டகொட ரோட், கொழும்பு- 9
[பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கடிதத் தொடர்பு]

செல்வி. மீரா மஜீத், 63, மொஹிதீன் மாவத, ஹுரீ மஹவ, நம்புக்கனை.
[கதை, கட்டுரை எழுதல், முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல்]

செல்வி. ஆர். சந்திரவதனி, கணேசபவனம், பிரதான வீதி, சாவகச்சேரி.
[பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், இயல் இசை நாடக ஈடுபாடு, தையல் முதலியன]

செல்வி. எம். என். மின்மினி, 'ஸ்ரீ முருகபதி' அல்வாய் வடக்கு அல்வாய்.
[கதை எழுதல், வாசித்தல்]

செல்வி. இன்பமலர் இராஜேந்திரன், 94 பராக்கிரம ரோட், கொழும்பு-14
[ரேடியோ கேட்பது, கடிதம் எழுதல், சினிமா பார்ப்பது]

செல்வி. இ. கௌரீஸ்வரி, மே/பா: வி. பி. இராஜரெட்ணம், தும்பளை ரோட், பருத்தித்துறை
[கதை கட்டுரை வாசித்தல், முத்திரை சேகரித்தல், சினிமா, பாட்டுக் கேட்டல்]

செல்வி. ராணி, 28 வெலன் பெசெஜ், கொம்பனித் தெரு, கொழும்பு-2
[பத்திரிகை வாசித்தல், சினிமா பார்த்தல், கடிதம் எழுதல்]

செல்வி. இ. மல்லிகாதேவி, 5ம் யூனிட், யோகபுரம், துணுக்காய்.
[முத்திரை சேகரித்தல், கடிதத் தொடர்பு, புகைப்படம் சேகரித்தல்]

செல்வி. மாலினி ஜயசிங்கம், 41, குரொஸ் வீதி, கண்டி.
[வானொலி கேட்டல், புகைப் படம் சேகரித்தல், நீந்துதல்]

செல்வி. பொ. இன்பராணி, மெயின் வீதி, கிரான், முறக்கொட்டான்சேனை.
[பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், தையல் வேலை செய்தல், வீட்டுத் தோட்டம்]

---

**விண்ணப்பப் பத்திரம்**

பெயர்: ------------------------------

முகவரி: ------------------------------

------------------------------

வயது: ------

பொழுதுபோக்குகள்: ------------------------------

------------------------------

தயவு செய்து பேனா நண்பர்கள் பகுதியில் எனது பெயரையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

------ திகதி

------ கையொப்பம்

---

# நெருப்பில் ஒரு செந்தாமரை



வானத்திலிருந்து பெரிய கயிறு தொங்கு.. கயிறு? பாம்பு. நாக்கை நீட்டிச் சுழட்டி... உஸ்ஸ்ஸ்... காற்று பலமாக அடிக்கிறது. தென்னை மரமும் மா மரமும் ஆடுகின்றன. ஊஞ்சல் மாதிரி பாம்பு அப்படியும் இப்படியும் ஆடுகிறது. ஊஞ்சல்... ஏறி ஓடித் தாவுகிறேன். ஊஞ்சல் கயிறாகிவிடுகிறது. பற்றிக் கொண்டு மேலே ஏறுகிறேன். மேலே மேலே மேலே மேலே...

— மாதவி —

'படீர்'

கயிறு அறுகிறது. நான் கீழே கீழே ..

கிணறு. கிணறு? ஏரி. ஏரியா? சமுத்திரம். சுற்றிலும் தண்ணீர். தண்ணீர். தண்ணீர்.

தண்ணீர் மீது நடக்கிறேன். முதலைக்குக் கால் முளைக்கிறது. மெல்ல மெல்ல மெல்ல...

ஐயோ. கால்கள் வளர்வதற்குள் நான் ஓடிவிட வேண்டும். ஓடு ஓடு ஓடத்.... முதலையும் ஓடிவருகிறது.

கண்கள். ஐயோ. பற்கள். ஐயோ. ஓடு. ஓடு.

புலி வருகிறது. சிங்கம் வருகிறது. அல்சேஷன் நாய் வருகிறது. குதிரை வருகிறது.

முதலை... ஐயோ. வாயைப் பிளக்கிறது...

தண்ணீருக்கு நடுவில் புளிய மரம். பிஞ்சுப் புளியங்காயையும் இளம் புளிய இலைகளையும் பச்சை மிளகாயுடன் போட்டு அரைத்து நாக்கில் வைத்தால்... த்சு. த்சு. த்சு... அப்படி ஒரு இனிமை. ஐயோ. முதலை வருகிறது. வந்து விட்.... அம்மாடி. மரத்தின் மீது ஏறிக்கொண்டேன். உச்சாணிக் கொம்பில் உச்சியில் சிறிய இலையின் மீது போய் நின்று கொள்கிறேன். பக்கத்து இலையில் பேய்..

அஹ்ஹஹ்ஹா... நீள நீளமான கைகள். பனைமரம் மாதிரிக் கால்கள்.

''வந்தாயா?''

படக் படக் படக் படக் படக் நெஞ்சு. வியர்வையில் சட்டை நனைகிறது.

குதி குதி குதி. தீர்ந்தாய்.

கண்கள் பெரிது பெரிதாக... கோலிக் குண்டு. நான் கோலி விளையாடினேனே,

விநாயகர் கோவிலுக்கருகே, மைதானப் புழுதியிலே வீதிகளிலே... நாகேனந்தம். ஐப்பரு சோலை. அறுமுகந்தகடி. எழுவாலிங்கம். எட்டுமஞ்சிக் கோட்டை தொம்பாய்ப் பீட்டை தோசிங்கு ராஜா. பேந்தா. கைமுட்டி எரியும். தெள்? அது இதிலே சேர்த்தியில்லை. கொம்பேறி. கிளித்தட்டு. அதுவும் சேர்த்தியில்லை.

பில்லி. புள்... ஊம்ஹூம். நாயடி புலியடி. அவள் சேர்த்தி:

அவள்.

அவள்.

ப்ளூ பாவாடை. ப்ளூ ஜம்பர். ஜிமிக்கி. ஒரே வகுப்பு. பக்கத்து வீடு. சேம்.

விளையாட்டும். படிப்பும்.

பள்ளியிலிருந்து சேர்ந்து திரும்பி வந்தால் ஐயோ:— அப்பா. அப்பா பார்க்கிறார்.



'சேருவியா... சேருவியா அவ்ளோடே? சேருவியா?' என் முதுகில் வரிவரியாக வரிவரியாக...

'இல்லேப்பா... இனிமே இல்லை... இல்லை...'

மறுநாள்.

அவளுடைய அழகான கண்கள். 'ராஜு' - அழகான குரல். அழகான சிரிப்பு. அழகான முகம். அழகான உடல்.

அப்பாவாவது? அடியாவது?

விமல். விமல். விமலா மட்டுமே.

மாலையில் அடி. அப்பாவின் சீற்றம். ச்சீ! அழுகை...

ஒருநாள் அழுதுகொண்டிருந்தாள். அழுகை. விமல்?

'ராமு என்னைக் கேலி செய்யறான்'

ராமு? ராமு. என் பற்கள் நற நற நற. தோளில் புத்தகப் பையைப் போட்டபடி அவன் போய்க்கொண்டிருக்கிறான்.

'டேய்'

அவன் ஓடத் தொடங்.. கல். கல்.

எடுத்து ஓங்கி வீசி அடிக்... கணுக்காலைப் பிடித்துக்கொண்டு அமருகிறான்.

'ஏண்டா? ஏண்டா?'— பளார் பளார். அறைகிறேன்.

'தாசி மகளைச் சொன்னால் உனக்கேண்டா?' அவன் திருப்பிக் கேட்கிறான். அவன் முதுகில், தலையில், கன்னத்தில் மாறி மாறி... கை வலிக்கிறது.

திரும்பி வருகிறேன்.

தாசி. தாசி. தாசி மகள். தாசி மகள்.

விமல். கண்ணீரைத் துடைக்கிறேன்.

மறுநாள். பள்ளி. டீச்சர். கணக்கு.

'பட்டியல் தயார் செய்... ஒரு மூட்டை அரிசி நூறு ரூபாய் வீதம் ஏழு மூட்டைகளும், ஒரு படி பருப்பு...'—டீச்சர்.

தாசி. தாசி... தாசி மகள். தாசி மகள்.

கந்தப்பு: முருகுப்பிள்ளையின் மகன் தங்கராசாவிற்குப் பேசுகிற பெண் சரியான சிவப்பி.

சின்னப்பு: தபால் பெட்டி நிறமோ?

—சி. தர்மகுலசிங்கம்




தாசி? தாசி?

'கோபு! கணக்கு எழுதலே?'

தாசி? தாசி? தாசி?

'டேய்! உன்னைத்தான்; என்ன பண்ணிட்டிருக்கே?'

தாசி? தாசி? தாசி? தாசி? தாசி மகள்???

காதில் கிள்ளல். தலையில் குட்டு. டீச்சர். அம்மாடி வலிக்கிறது.

'தாசி!'

—'பளார்'— என் கன்னத்தில் அறை.

'அயோக்கிய ராஸ்கல்'

'தாசி என்றால் என்ன டீச்சர் அர்த்தம்?'

—பளார். பளார். பளார்.

'வாயை மூடுடா, மடையா'

மூடிக்கொள்கிறேன். கன்னம் வலிக்கிறது.

அவளைத் திரும்பிப் பார்க்கிறேன். அவள் தலைகுனிந்து அமர்ந்திருக்கிறாள்.

நான் அமருகிறேன். டீச்சர் நகருகிறார்.

தாசி. தாசி. தாசி. தாசி. தாசி. தாசி. தாசி.....

'டண் டண் டண்' -பள்ளி மணி ஒலிக்கிறது.

கல கல கல கல....

தாசி மகள். தாசி மகள். தாசி மகள். தாசி மகள்.

'என்ன யோசிச்சுட்டிருக்கே? வீட்டிற்கு வரலே?' —விமலா.

எல்லோரும் போய்விட்டிருந்தார்கள். விமலாவும் நானும் மட்டுமே.

எழுகிறேன். தோளில் பையை மாட்டுகிறேன்.

நடக்கிறோம்.

'டீச்சர், அடிச்சது வலிக்கிறதா?'

தாசி. தாசி மகள். தாசி. தாசி மகள். தாசி. தாசி மகள்.

'என்ன யோசிச்சுட்டே வர்றே?'

'உம்: என்ன கேட்டே?'

'என்ன யோசிக்கறே?'

தாசி. தாசி மகள். தாசி தாசி மகள். தாசி தாசி மகள்.

'புரியவில்லை.'

'எது?'

!எதுவுமே'

— □ —

புரிந்தது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு.

விமலா பள்ளிக்கு வருவது நின்றுவிட்ட பிறகு, விமலா. சேற்றில் செந்தாமரை. புழுதியிலே மாணிக்கம்.

செந்தாமரையை எடுக்கப் போகிறேன். மாணிக்கத்தைத் தூய்மைப்படுத்தப் போகிறேன்.

'இவனுக்கும் அவளுக்கும்...'

'எவளுக்கும்?'

'விமலா'

'விமலா?'

'அதுதான் இனிஷியல் இல்லாதவள்?'

,ம்?'

'அப்பன் பேர் தெரியாதவள். எத்தனையோ அப்பன்களாச்சே?'

'அவளையா?'

'ஆமாம்'

'மடையன்'—'ஐந்து ரூபா'

திரும்பிப் பார்க்கிறேன். எனக்குப் பின்னால் சங்கரனும், குமரனும்.

'ஐந்து ரூபா' — பல்லை நெறிக்கிறேன்.

ஐந்து ரூபா. ஐந்து ரூபா. ஐந்து ரூபா. ஐந்து ரூபா. ஐந்து ரூபா.

—ஜிவ்வ்வ்வ்வ்

டெஸ்கைத் தாண்டிக் குதிக்கிறேன்.

தாடையில் ஒரு குத்து. சங்கரன்— 'ஐயோ' —பல்லிடுக்கில் குருதி.

'எவ்வளவு ரூபா?' 'எவ்வ

## சிரித்திரு

தன் கணவர் காரியாலயத்தில் காதல் லீலையில் ஈடுபட்டுள்ளார் என்று அறிந்த ஒரு மனைவியின் தந்திரம், பக்கத்து வீட்டுப் பதினாலு பிள்ளைகளையும் கணவரின் கந்தோருக்குக் கூட்டிக் கொண்டு போனதுதான்.

என் கையின் வலிமை அவனுக்குப் புரிகிறது. கீழே விழுகிறான் அவன்.

ஆசிரியர் வருகிறார்.

'என்னடா இது?'

ஐந்து ரூபாயாமே ஐந்து ரூபாயாமே

'இது வகுப்பறை'

'உன் வேலையைப் பார்த்திட்டுப் போடா'- ஆசிரியர் முகத்தில் ஒரு அறை. அவர் விழிக்கிறார்.

'உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்' - பல்லை நெறித்தபடி வெளியேறுகிறார்.

நான், டார்ஜான் மாதிரி வெளியே வருகிறேன்.

விமலா. என் விமலா. விமலா. என் விமலா.

பட்டணத்திற்கு கல்லூரிக்கு மேற்படிப்பு படிக்கப் புறப்படுவதற்கு முன் தினம் ஆற்றங்கரை அருகே அவளைச் சந்தித்தேன்.

'விமலா மூன்றே மூன்று வருடம். வந்தவுடனே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறேன்...'

அவள் அழுகிறாள். அவளுடைய அழகான கண்களில் கண்ணீர்த் துளிகள்.

'அழுகிறாயா?'

அம்மா என்னைக் கட்டாயப் படுத்துகிறாள்'

'எதற்கு?'

'அதற்குத்தான்'

பெருமூச்சு விடுகிறேன். 'தைரியமாக இரு'

'மூன்றே ஆண்டுகள்'

—அவள் முணுமுணுக்கிறாள்

— □ —

மூன்றே ஆண்டுகள் தாம்.

ஆனால் மூன்று யுகங்களாகக் கழிகின்றன. கல்லூரி ஹாஸ்டலின் சிறை வாழ்வில் குளிக்கும் போதும் உறங்கும்போதும் உண்ணும்போதும் உலவும்போதும் படிக்கும்போதும், விமலா விமலா விமலா விமலா விமலா விமலா...

கனவில் புஷ்பங்களாக மலர்ந்தாள். நினைவுகளில் தேவதையாக உலவினாள்.

மூன்று யுகங்களுக்குப் பிறகு,

ஒவ்வொரு வினாடியையும் மிகச் சிரமப்பட்டு நகர்த்தி முடித்த மூன்று யுகங்களுக்குப் பிறகு,

பழைய ஊரின் ரயில் நிலையத்தில் இறங்கி நிற்கிறேன்.

அப்பா. அம்மா. உற்ருேர். சுற்றம் நண்பர்கள்.

விமலா? அவள் இல்லை. அவள் வரமாட்டாள். வர முடியாது!!!

'சௌக்கியமா?'

'இளைத்துவிட்டாயே?'

'சரியாகச் சாப்பிடுவதில்லையோ?'

விமலா விமலா. விமலா விமலா. விமலா. விமலா.

கட்டை வண்டி நகர்கிறது. நிற்கிறது. இறங்குகிறேன். வீடு. பழையமாதிரியே. குளிப்பு. சாப்பாடு. விசாரணைகள். அலுப்பு.

விமலா. விமலா. அவள் எங்கே?

உலவ் வருகிறேன். ஆற்றங்கரை. விநாயகர் கோயில். அரசமரம். படித்துறை. எல்லாம் பழையபடியே.

விமலா? அவள் என்னவாளுள்?

'சௌக்கியமா? எப்போ வந்தே?'—கண்ணன். என் நண்பன். ஏதோ சொல்கிறேன்.

'விமலா?'—கேட்கிறேன்.

'விமலாவா?'

'ஆமாம். அவள்தான்.'


'அவளைப் பத்தி இப்ப என்னடா பேச்சு? வேறு ஏதாவது பேசு'

'அவள் சௌக்கியமா?'

'அந்த தாசியைப் பத்தி ஏண்டா?'

தாசி. தாசி. தாசி. தாசி. தாசி.

—ஜிவ்வ்வ்.



'அவள் நல்லவள் டா!'

—நான்

'போடா. எனக்குத் தெரியாதா?'

'எனக்குத் தெரியும். அவள் உத்தமி. அவள் உத்தமி.'

'தண்ணீரில் எழுதிவை. அவள் கெட்டுவிட்டாள். நானே சான்று. நானே...'—சிரிக்கிருன்.

—ஆஅஅஅஅ... ம்ம்ம்ம்

'உண்மையாகவா?'

'ஊரே சொல்லும்'

—ஜிவ்வ்வ்வ்வ்வ்வ்

'என் அம்மா கட்டாயப் படுத்துகிருள்... என் அம்மா கட்டாயப்படுத்துகிருள்... தைரியமாயிரு.. தைரியமாயிரு... தைரியமா இரு...'

'அவள் கெட்டுவிட்டாள். நானே... நானே... நானே...'

உண்மையா? உண்மையா?

— □ —

உண்மைதான்.

விமலா அழுதபடி அதைச் சொன்ளுள். சேற்றிலிருந்து நான் பறிக்க நினைத்த செந்தாமரை வாடிப்போய்விட்டதா?

'நினைக்கிறபோது அப்படியே அக்கினிப் பிரவேசமாகி விடலாம் போலிருக்கு எனக்கு. ஆனாலும் கோழையாயிருக்கேனே! என் அம்மா பாவி...'

'உன்னை நான் திருமணம் செய்துகொள்கிறேன்'

'என்னையா?'

'உன்னைத்தான்'

அவள் குமுறிக் குமுறி அழுகிருள். அவளுடைய அழகின் பரிசுத்தமான வாளிப்பு எங்கே போய்விட்டது? எங்கே? எங்கே?

'நான் வேண்டாம் உங்களுக்கு; நான் சாக்கடையாயிட்டேன். உங்களோடு வாழ எனக்குத் தகுதியில்லை. என்னை மறந்துடுங்களேன்'

'விமலா'

'நீங்கள் என்னைத் திருமணம் செய்துகொள்கிறேன் என்று சொன்ன அந்த வார்த்தையே எனக்குப் போதும். ஆயிசுக்கும் அந்த வார்த்தைகளை நினைச்சுண்டே நான் வாழ்ந்திடுவேன்.'

விமலாவின் அழகான கன்னங்களின் போதை, அழகான கண்களின் கவர்ச்சி, இதமான குரலின் இனிமை எங்கே எங்கே எங்கே...

'நானே நானே நானே நானே நானே' — கண்ணன்.

நெஞ்சில் குபீர் எனத் தீ.

'சத்தியமாக உன்னைத் திருமணம் செய்துகொள்ளப்போகிறேன். வாடிப்போன செந்தாமரையை மறுபடியும் மலர்விக்கப் போகிறேன்...

'உலகமே எதிர்க்குமே'

—அவள் அழுகிருள்

'உலகம் எதிர்க்கட்டுமே;

—பல்லைக் கடிக்கிறேன்'

— □ —

உலகம் எதிர்த்தது.

கழுத்திலே பளபளப்பாகத் தாலி மின்னும் அவளை அழைத்துக்கொண்டு வாசற்படி ஏறும் போது,

'இந்த கெரகத்தைக் கூட்டிக்கொண்டு வீட்டு வாசற்படி ஏறுதேடா மடையா'— அப்பா.

கீழே இறங்கி நடக்கிறோம்.

பெற்றோர். உற்றோர். நண்பர். தெரிந்தவர். தெரியாதவர் எல்லோருமே.

'உனக்கு ஏண்டா இப்படிப் புத்தி போயிற்று?'

'நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டிலே வைக்கலாமாடா?'

'பைத்தியமா பிடிச்சிருக்கு?'

'ஊர் அறிஞ்ச விபசாரிடா அவள்'
—நான் கல்லாக இருக்கிறேன்.

விபசாரி. விபசாரி. விபசாரி

அவளை அப்படி ஆக்கியது யார்? நாசமாய்ப் போன உலகம். நாசமாய்ப் போன...

'நீ நாசமாகத் தான் போவாய்!'

இவளை வைத்துக்கொண்டு வாழ்வியாடா, நீ? வாழ்வியா?'

— □ —

வாழ்ந்தேன்.

நாட்கள்: வாரங்கள். மாதங்கள் ஒன்று இரண்டு மூன்று...

ஊரை விட்டு, உறவை விட்டு, நட்பை விட்டு, உலகை விட்டு, பழுத்து விழுந்துவிட்ட இலைகள் மாதிரி...

தனிமையான யோகம்.

வெறுப்பும், அருவருப்பும்,

கிழவர்: என்ன தம்பி பனை வடலியைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றாய்?

வாலிபர்: நான் எஸ். எஸ். சி பாஸ்பண்ணிய காலத்தில் இந்த வடலி என் இடையளவில் நின்றது. இப்போ இது வளர்ந்து பாளையும் வந்துவிட்டது; எனக்கு இன்னும் உத்தியோகம் கிடைக்கவில்லை.

கிழவர்: ?...?...?

—திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

ஏச்சும் சூழ்ந்திருக்க, துணிவை மட்டுமே கொண்ட வேள்வி.

வேள்விதான்.

ஆனால் இனிப்பா?

'ஏன் விமல். ஒரு மாதிரி இருக்கிறாய்?'

'ஒன்றுமில்லை.'

அவளுடைய சிரிப்பெங்கே? கலகலப்பெங்கே? மலர்ச்சியெங்கே? உற்சாகமெங்கே?

'நீ மறைக்கிறாய்!'

'என்னை நம்புங்களேன்'

வேள்வியின் வெப்பமும், யோகத்தின் சித்திரவதையும், தனிமையின் தண்டனையும்... அவையா? அவையா? அல்லது வேறா?

'உங்களோடு வாழ்கின்ற ஒவ்வொரு விநாடியும் சித்திரவதை மாதிரி இருக்கிறது எனக்கு. பழைய அருவருப்பான வாழ்க்கையை நினைக்கிறபோது, இந்தக் கேடுகெட்டவளைத் திருமணம் செய்துகொள்வதற்காக எல்லோரையும் பகைத்துக்கொண்டு... ஐயோ! நீங்கள் தெய்வம். நீங்கள் தெய்வம்.'

'.........'

'உங்களுடைய இந்தத் தெய்வத் தன்மையைப் பார்க்கிறபோது உங்களோடு வாழ்வதற்குக் கொஞ்சமும் கூட அருகதையற்றவள்... அருகதை அற்றவள்...'

'முட்டாள் தனமாகப் பேசாதே'

'.........'

'விமல் அழுகிறாயா?'

'.........'

'நீயாக எதையாவது நினைத்துக்கொண்டு மனதைக் குழப்பிக் காதே...'

'.........'

'எங்கே சிரி'

'ம்'

'இனிமே அழக்கூடாது'


'இனிமேல் அழவில்லை'

— □ —

அதற்குப் பிறகு அவள் அழவில்லை. அழுவதற்கு அவள் இல்லை.

ஒருநாள் மாலை—

வீட்டிற்குள் நுழைந்து பூட்




ப்பட்ட சமையலறைக்கு இப்புறம், கருகும் வாசனையுணர்ந்து விக்கித்து நின்று...

கடிதம். கண்களைக் கவ்வியது. அவளுடைய எழுத்துக்கள் தான்.

'இறுதி வணக்கம். உங்களோடு வாழ அருகதையற்றவள் நான். தெய்வத்திற்குப் புழுதி மலர் பூசனையாவதற்கில்லை.'

—ஜிவ்வ்வ்வ்வ் .. நரம்பில் கனல்.

'விமல் விமல், விமலா அஅஅ'

'படீர்'

'படீர்'

'படீர்'

—கதவு உடைகிறது. கீழே விழுகிறது.

உள்ளே————

நரகம்.

மண்ணெண்ணெய் வாசனை.

விமலாவின் அழகான உடல் அழகான கண், அழகான வாய், அழகான கன்னங்கள் எல்லாமே எல்லாமே

கருகிச் சிறுத்து...

'விமலா அஅஅ...'

அக்கினிப் பிரவேசமாகி விட்ட ஓர் அழகான செந்தாமரை.

'விமலா அஅ'

—கதறிக் கதறிக் கதறி...

அஹ்ஹஹ்ஹஹ்ஹா...

வானத்திலிருந்து கயிறு தொங்குகிறது. கயிறு? பாம்பு விமலா. விமலா அஅஅஅ

'அவள் கெட்டுவிட்டாள்.'
'நானே' —கண்ணன்.

நானே நானே நானே நானே

அஹ்ஹஹ்ஹஹ்ஹா...

விமலா அஅஅஅஅ

வானத்திலிருந்து பாம்பு. ஊஞ்சல். புளியமரம், முதலைக்குக் கால். தண்ணீர்.

விமல். விமல். விமலா அஅஅ

— □ —

பிச்சைக்காரன் 1: அண்ணைச்சி இப்போது எங்கு இருக்கிறாய்?
பிச்சைக்காரன் 2: நான் தாஜ் மகால் ஹொட்டலில் தங்கியிருக்கிறேன்;
பிச்சை 1: அடேயப்பா!!!
பிச்சை 2: என்னப்பா மலைக்கிறே.. அந்த ஹொட்டல் தாவாரத்தில்.

+

ஒருவர்: என்ன அண்ணைச்சி அதில் பெரிய சனக்கூட்டமாக இருக்கு?
மற்றவர்: சினிமா நடிகை கமலஸ்ரீயின் நாய் போகுது அதுதான்...

+

அவதானநிலைய அறிக்கை

காலையில் கனத்த மழை பெய்யலாம்; சற்று நேரம் சென்று வெய்யில் எறிக்கலாம். ஒரு சமயம் மேகம் சூழ்ந்து வானம் காணப்படலாம். சில சமயம் புயலும் வீசலாம். மெல்லிய இளம் காற்ருக மாறிடினும் மாறலாம். இரவில் புழுக்கமாக இருக்கலாம். அல்லாவிடில் குளிராக இருக்கலாம். இவை போன்று பலவாக வானிலை இருக்குமென நம்பப்படுகின்றது.

+

நீச்சல் தடாகத்தில் ஒருவர் உயரமான இடத்திலிருந்து நீருள் பாய்கிருர்.
இரண்டாந் தடவையாக மீண்டும் ஏறிக் குதிக்கிருர்.
மூன்ருந் தடவையாக ஏறிக் குதிக்கிருர்.
மீண்டும் நாலாந் தடவையாக ஏறிக்

கு
தி 0
த் 0
தா °
ர் °°

# நடுநிசி

சி. கே. சிவா

(9)

நேரம் சுமார் பன்னிரண்டு, பன்னிரண்டரை இருக்கலாம். பருத்தித்துறைக்கு நேர் வடக்கே சுமார் பதினைந்து மைல்களுக்கப்பால் ஓர் இயந்திரப் படகு வேகமாக வந்து கொண்டிருந்தது.

சிறிய, பெரிய பெட்டிகளும் டின்களும், 'ஒயில் பேப்பர்' 'பார்சல்'களுமாக படகு முழுவதும் நிறைந்திருந்தன.

படகின் மேல் விளிம்பில் சாய்ந்தவாறே நான்கு பேர் நின்று கொண்டிருந்தனர்' ஒருவன் மட்டும் படகின் திருப்பு விசையை பிடித்தவாறு அதை ஓட்டிக்கொண்டு வந்தான்.

உள்ளே ஒரு பக்கத்தில் கிடந்த பலகை ஒன்றில், ஒரு பெண் படுத்திருந்தாள். அவள் மயங்கிய நிலையில் இருந்திருக்க வேண்டும், ஆடாமல் அசையாமல் மரக்கட்டைபோல் உணர்விழந்து கிடந்தாள்.

கடலலைகளின் பேரிரைச்சலையும், கொந்தளிப்பையும் பொருட்படுத்தாது விரைந்து கொண்டிருந்தது அந்த இயந்திரப் படகு அப்போது...

அவளின் உடல் ஒருமுறை லேசாக அசைந்தது.

'மயக்க மருந்தின் சக்தி குறைந்து விட்டது போலிருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவள் எழும்பி விடுவாள் என்று நினைக்கிறேன்' என்றான் ஒருவன் அருகிலிருந்த மற்றவர்களைப் பார்த்து.

'ஆமாம் அப்படித்தான் தோன்றுகிறது. இனிமேல்த்தான் நாம் அதிக கவனமாக இருக்க வேண்டும்' எழுந்ததும் 'படபட'வென்று ஏதாவது கேட்பாள். 'நைசாகப்' பேசி சமாளித்து விடவேண்டும். எக்காரணம் கொண்டும் அவள் மனதைப் புண்படுத்தக் கூடாது.' என்றான் மற்றொருவன்.

அவர்கள் நினைத்தது போலவே சிறிது நேரத்தில் அவள் கண்கள் மெல்லத் திறந்தன. ஆனால் உடனே மறுபடியும் மூடிக்கொண்டன!

மீண்டும் ஒருமுறை கண்களை விழித்த அவள் பலகையில், மெல்ல நெளிந்தாள். பின் பரபரப்போடு பலகையை விட்டு எழுந்தாள்,

குதிக்கும் அலைகளையும், கொந்தளிக்கும் கடலையும் ஒருமுறை பார்த்தாள். பின் அங்கிருந்தவர்களையும் மாறி, மாறிப் பார்த்து விழித்தாள். எதுவுமே புரிந்ததாகத் தெரியவில்லை— அரை மயக்க நிலை அவளுக்கு.

அப்போது அருகிலிருந்தவன் 'தேமஸ் பிளாஸ்க்' கிலிருந்து, ஒரு 'கப்' காப்பியை ஊற்றி அவளிடம் நீட்டினான்.


அப்படியே அதை வாங்கி 'மடமட' வென்று ஒரே மூச்சில் குடித்தாள். தாங்க முடியாத பசியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இன்னிலையில் தன்னந்தனியளாக இருந்த ஒரு பெண் காப்பியாவது—குடிப்பதாவது-- அதுவும் முன்பின் தெரியாத ஒரு ஆடவன் கொடுத்தது.

காப்பியைக் குடித்தபின் தான் அவளுக்கு உயிர் வந்திருக்க வேண்டும்!

'நீங்கள் எல்லாம் யார்? என்னை எங்கு கொண்டு போகிறீர்கள்?'

'ரேணுகா! நீ சிறு குழந்தை அல்ல—வளர்ந்த பெண்—அதிலும் படித்த பெண். நீ இப்போது இருக்கும் நிலை உனக்குப் புரிந்திருக்குமென நினைக்கிறேன். பேசாமல் நாங்கள் சொல்கிறபடி நடப்பதுதான் உனக்கும்

---



ஆசிரியர்:- பெரிய புதுமையாயிருக்கே இண்ணைக்கு கந்தசாமி பள்ளிக்கு வந்தது.

கந்தசாமி: இண்ணைக்கு எங்க வீடு வேயிறுங்க.. அது. தான் வந்தேன்

நேர்ஸ்:- உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கு!

குழந்தையின் தந்தை:- முகச்சாயம் பூசிறதா அல்லது முகச்சவரம் செய்கிறதா பிறந்திருக்கு?

நல்லது—எங்களுக்கும் நல்லது. சுருக்கமாகச் சொன்னால் நீ இப்போது இலங்கையை நோக்கி அதுவும் உன் சொந்த ஊரான யாழ்ப்பாணத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறாய். இவ்வளவுதான் இப்போது என்னால் சொல்ல முடியும். இன்னும் கொஞ்ச நேரம் போனால் நீயே எல்லாம் புரிந்து கொள்வாய். மேற்கொண்டு எதுவும் கேட்காதே. பேசாமல் அந்தப் பலகையில் இரு—அசதியாக இருந்தால் படுத்துத் தூங்கு.'

மேற்கொண்டு அவர்களிடம் எதுவும் கேட்பதில் பலனில்லை என்று நன்றாகப் புரிந்தது ரேணுகாவுக்கு ஆனால்...

இவர்கள் யார்? என்னை எங்கு கொண்டுபோகிறார்கள்.. யாழ்ப்பாணத்துக்கு என்கிறார்களே—அங்கு ஏன் இப்போது அதுவும் பலாத்காரமாகக் கொண்டு போக வேண்டும்? என்னை எப்படி இந்தப் படகுக்கு கொண்டுவந்தார்கள்? இங்கு வருவதற்கு முன் நான் எங்கிருந்தேன்?

ஆ..ஆ... மகாபலி புரத்தில் அல்லவா இருந்தேன்; ரேணுகாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக பழைய நினைவுகள் மீண்டன. நீண்ட சங்கிலித் தொடர்போல அவை அவள் மனக்கண்ணில் தோன்றின.

'மட்ராஸில்' உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் பீ. ஏ படித்துக் கொண்டிருந்தாள் ரேணுகா. தங்கியிருந்தது எல்லாம் கல்லூரி 'ஹாஸ்டலில்'தான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை கல்லூரி விடுமுறை நாள். 'ஹாஸ்டல்' மாணவிகளெல்லாம் அன்று மகாபலிபுரம் 'பிக்னிக்' போவதாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

'ஏன்டி ரேணுகா! நீதான் மகாபலிபுரத்துக்கு ஒரு முறை போகவேணும்—அங்குள்ள பல்லவ காலச் சிற்பங்களை எல்லாம் பார்த்து ரசிக்க வேணும் என்று ஓயாமல் கத்திக் கொண்டிருந்தாயே! இன்றைக்கு நாங்கள் அந்தப் பக்கம்தான் 'பிக்னிக்' போகிறோம். நீயும் வாயேன்'? என்றாள் ரேணுகாவின் திருச்சித் தோழி திரேசா.

இன்னும் ஒரு மாதத்தில் பரீட்சை—அதற்கு மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தாள் ரேணுகா. கடல் கடந்து வந்து கடைசிப் பரீட்சையில் 'கோட்டை' விடுவதா!

ஆனாலும் தோழிகளெல்லாம் போகும் போது, அவளால் மறுக்க முடியவில்லை. மேலும் எத்தனை நாளாக கண்டுவந்த கனவு இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் மீண்டும் ஒன்று கிடைக்குமோ கிடைக்காதோ? புறப்பட்டு விட்டாள் அவளும் மற்றவர்களுடன்.

விசேடமாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த தமிழக 'ஸ்டேட் பஸ்' ஒன்று அவர்களை மகாபலிபுரம் நோக்கி சுமந்து சென்றது.

தன் தோழிகள் சகிதம் மகாபலிபுரம் சிற்பக் கோவிலை சுற்றிச் சுற்றி வந்தாள் ரேணுகா. அங்கிருந்த உயிர்ச் சிற்பங்களின் கலையழகில் தன் உள்ளத்தையே பறி கொடுத்துவிட்டாள் அவள்.

ஆகா! எத்தனை கலையழகு—எங்கு நோக்கினும் சிற்பம்!—எங்கு நோக்கினும் கல்லில் பொதிந்த கவிதை!

எத்தனை நாளாகத் தான் கண்ட கனவு இன்றாவது பலித்ததே! அந்த உயிர்ச் சிற்பங்களையும்—உன்னத சிகரங்களையும்—




## சிரித்திரு

நீங்கள் ஏன் அரசியலில் குதித்து, பாராளுமன்ற அங்கத்தினராக வரக்கூடாது என்று ஒரு பிரபல ஹாஸ்ய நடிகரை ஒருவர் கேட்டார்' பாராளுமன்றத்தில் கோமாளியாய் இருப்பதை விட, மேடையில் நன்கு நடிப்பது நல்லதல்லவா என்றார் அந்த பிரபல ஹாஸ்ய நடிகர்.

பொங்கி வரும் கடலலையையும் அதனருகே கம்பீரமாக எழுந்து நின்ற கலங்கரை விளக்கத்தையும் நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது அவளுக்கு.

அவள் கலையுள்ளம் கற்பனை உலகில்—வரலாற்று நிகழ்ச்சிகளில் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டது.

இதனையெல்லாம் — இந்தக் கல்லில் வடித்த காவியங்களை எல்லாம் செதுக்கிய பல்லவ காலச் சிற்பிகளுக்கு எவ்வளவு திறமை இருந்திருக்க வேண்டும்- எத்தகைய கலை உணர்ச்சி இருந்திருக்க வேண்டும்! அவர்கள் கை உளி பட்ட ஒவ்வொரு கல்லும் ஒவ்வொரு கவிதை பாடுகிறதே!

அந்தப் பல்லவப் பேரரசன் நரசிம்மவர்மனுக்குத்தான் எவ்வளவு கலையுள்ளம் இருந்திருக்க வேண்டும். தன் உள்ளத்து உணர்ச்சிகளை எல்லாம் கல்லிலே வடிக்கச் செய்த அவன் உண்மையிலேயே 'கலைக் காவலன்'தான்.

அவன் தன் வாழ்நாளில் செய்த பணிகளுக்கு—புரிந்த சாதனைகளுக்கு எல்லாம் இந்தச் சிற்பக் கோவில் அல்லவா சிகரமாக விளங்குகிறது!

அவன் அன்புக் காதலி சிவகாமி தான் எத்தகைய பாக்கியம் செய்தவளாக இருக்க வேண்டும். அந்தக் 'கலை' மன்னனுடன் கை கோர்த்துக் கொண்டு காலமெல்லாம், இந்தக் கலையுலகில் பவனி வந்திருப்பாளல்லவா அவள்!

இதோ இந்தப் பாறையில்த்தான்—இப்படித்தான், என்னைப் போல அவர்களும் சோடியாக அமர்ந்திருந்து இந்தக் கலையுலகை கண்காணித்திருப்பார்கள் காதல் கீதம் பாடியிருப்பார்கள்.

நாமும்தான் விஞ்ஞானமென்றும் விண்வெளிச் சாதனை என்றும் போற்றுகிறோமே! இத்தகைய ஒரு கலைக் கூடத்தை அமைத்திருக்கிறோமா — அமைக்கத்தான் முடியுமா!

யாரோ நரசிம்மப் பல்லவன் என்ற ஒருவன் என்றோ ஒருநாள் ஆக்கிவைத்த கலைக் களஞ்சியத்தைப் பார்க்கிறோம் பரவசப் படுகிறோம் அவ்வளவுதான்.

தன்னை மறந்த நிலையில் ரேணுகா, கூட வந்த தோழிகளைக் கூட மறந்து 'காமிரா'வும் கையுமாக அலைந்து திரிந்தாள்!

அதோ ஒரு யானை—உயிர் யானையா அது—இல்லை—வெறும் கல்லுத்தான் யானையாக உருப் பெற்றிருந்தது.

அதைத் தன் 'காமிரா'வுக்குள் விழுத்த படாதபாடுபட்டுப் 'போக்கஸ்' பண்ணிக் கொண்டு நின்றாள் ரேணுகா, அப்போது...

ஒரு முரட்டுக்கரம் அவள் முகத்தை மூடி அழுத்திப் பிடித்தது. அந்த இரும்புப் பிடியிலிருந்து திமிற முடியாமல் திணறினாள் ரேணுகா. கையிலிருந்த 'காமிரா' நழுவி 'தடா'லென்று கீழே விழுந்தது.

மூக்குக்குள் ஏதோ ஒருவித அருவருப்பான நெடி புகுந்ததை உணர்ந்து கொண்டாள் ரேணுகா கொஞ்சம் கொஞ்சமாக அவள் தன் சுய நினைவை—பிரக்ஞை இழந்து கொண்டு வந்தாள்.

அதன் பின் இப்போதுதான் இந்தப் பயங்கரமான இருட்டில் இயந்திரப் படகில் கண் விழித்தாள்:

இடையில் என்னென்னவெல்லாம் நடந்ததோ அவளுக்குத் தெரியாது'

தோழிகளெல்லாம் மகாபலிபுரம் முழுவதும் தன்னைத் தேடியிருப்பார்கள்—காணாது கல்லூரிக்குத் திரும்பியிருப்பார்கள்; அநேகமாக இந்நேரம் யாழ்ப்பாணத்திலுள்ள தந்தைக்குக் கூட செய்தி போயிருக்கும். செய்தியை அறிந்ததும் தந்தை கருணாகரன் எப்படித் துடித்துப் போவார், என்பதை நினைத்த



ஒருவர்:- என்ன பிரசங்கியார் கூடை நிறைய முட்டை கொண்டு போறீங்க... ஏதாவது விருந்தோ...

பிரசங்கியார்:- நம்ம கூட்டத்திலே குழப்புற ஆட்களுக்கு எறியக் கொண்டுபோறேன்.

சிம், அவள் உடம்பே ஒருமுறை துல்லிட்டது;

தந்தையைத் தன்னால் மறுபடியும் உயிருடன் பார்க்க முடியுமா என்பதே சந்தேகந்தான்'

தான் எப்படி அவரிடம் போக முடியும் தனக்கு வரப் போவது வாழ்வா! சாவா என்று கூட அல்லவா அவளுக்குத் தெரியவில்லை· தன்னை மறந்த நிலையில் 'நல்லூர்க் கந்தா' என்று அவள் வாய் ஒரு முறை முணு முணுத்தது.

எதையும் லட்சியம் செய்யாது தண்ணீரை இரு கூறுக்கிக் கிழித்தபடியே விரைந்து கொண்டிருந்தது அந்த இயந்திரப் படகு அதன் முன் முனையில் மோதிய பேரலைகளெல்லாம், செயலிழந்து நுங்கும் நுரையுமாக மாறி பின் சென்றன,

திடீரெனத் துள்ளிக் குதித்தான் அதற்குள்ளிருந்த ஒருவன் 'அதோ பருத்தித்துறை 'லைட் ஹவுஸ்' தெரிகிறது. அதுக்குக் கொஞ்சம் கிழக்குப் பக்கமாகப் படகை ஒட்டிக் கொண்டு போ. இப்போ நேரம் இரண்டு மணி இன்னும் அரை மணித்தியாலத்துக்குள் கரை சேர்ந்து விடுவோம் ஆனல் ஆபத்தும் இனிமேல்த்தான் காத்திருக்கிறது. ஒருவரும் பலமாகக் கதைக்கவோ, 'சிகரெட்'பீடி புகைக்கவோ கூடாது ஒவ்வொருவரும் எதற்கும் தயாராக. அமைதியாக இருக்கவேண்டும். காதை மட்டும் கூர்மையாக்கிக் கொண்டு ஏதாவது இயந்திரப் படகு வருகிறதா என்று கவனியுங்கள் சரி.. சரி அண்ணே படகு ஓடக் கூடிய அளவில் அதன் 'மக்சிமம் ஸ்பீடில்' 'போட்'டை ஒட்டுங்க' புது வேகத்துடன் படகு ஓடத் தொடங்கியது,

ஒரு பத்து நிமிடம் கூடப் படகு ஓடியிருக்காது, வேறு ஒரு இயந்திரப் படகின் ஓசை அவர்கள் காதில் விழுந்தது அவசரமாகப் படகை நிறுத்தி விட்டு அதன் 'என்ஜினை'யும் 'ஆஃப்' செய்து விட்டார்கள்.

வ்ரவர அந்த இயந்திரப் படகின் ஓசை கூடிக் கொண்டே வந்தது ஒவ்வொருவர் முகத்திலும் பீதியும் கலவரமும் குடி கொண்டது. படகுக்குள் இருந்த வாறே, தலையை மட்டும் வெளியே நீட்டி சுற்றுடலைக் கவனித்தார்கள். அப்போது...

அவர்களுக்கு சுமார் நூறு யாருக்கு அப்பால் மேற்கிலிருந்து கிழக்குக்கு ஓர் இயந்திரப் படகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது' அந்தப் படகிலிருந்தவர்கள், இவர்களைக் கண்டதாகத் தெரியவில்லை. சுமார் ஐந்து நிமிடத்தில் வேகமாக மறைந்து விட்டது அது.

'அண்ணே! அது 'நேவி'க் காரங்க 'போட்'டாத்தான் இருக்கணும்' வேகத்தைப் பார்த்தா அப்பிடித்தான் தெரியுது. நல்ல வேளை எங்களை அவங்க காணவில்லை. நீங்க எடுங்க அவங்க திரும்பிறதுக்குள்ளை கரை சேர்ந்துடனும்.

மீண்டும் 'சடசட' வெனக் கிளம்பிய அந்தப் படகு, ராட்சத வேகத்துடன் கரையை நோக்கிப் பாய்ந்தது.

(தொடரும்)


தங்க நகைகளும், தரம் மிகுந்த புடவைத் தினிசுகளும் வாங்க விஜயம் செய்யுங்கள்

சிங்காரம்ஸ் - டைமா நகைமாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு-11.

டெலிபோன்: 20875

# நிராசை

'பால் வடியும் இந்தப் பாலகியின் முகத்தைப் பாருங்களத்தான்! இந்தப் பிஞ்சுக் குழந்தையின் வாழ்வுக்காகவாவது என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்! என்னைக் கல்யாணம் செய்தபின்னுல், 'நீ இல்லாவிட்டால் என் தலையே வெடித்துவிடும்' என்பீர்களே! இப்பொழுது நானிருப்பதால் தான் உங்கள் தலை வெடிக்கிறதா?... அப்படியானுல் நான் போய்விடுகிறேன்!... எனக்காக... என்னுல் நீங்கள் சாகக்கூடாது... இந்தக் குழந்தை... இது... இதுவும் சாகக்கூடாது. இதைக் காப்பாற்றுங்கள்! என்னை மறந்தாலும், இந்தக் குழந்தைக்கு... உயிர்ப்பிச்சை கொடுங்கள்' எனக்கு இந்த உலகத்திலே இடமில்லை என்ருலும்...'—கணவன் பாதங்களைப் பற்றிக் கண்ணீரால் கழுவிய கமலம், மெல்ல நிமிர்ந்தாள்.

கமலம்!

காலையிலே கதிரவனைக் கண்டு களிபேருவகை கொள்ளும் கமலம், காலையிலே மனமொடிந்து மங்கி மடிவதுதானே மரபு!

ஆம்! கமலத்தின் வாழ்வும் அப்படித்தான். கல்யாணம் செய்த புதிதில் அவளுக்குக் கிடைத்த வரவேற்புகள்தான் எத்தனை! எத்தனை!! அத்தனையும் ஒரு நொடிப் பொழுதில் மறைந்தது போலிருந்தது, அவளுக்கு.

'வேண்டாம்! வேண்டாம்!' என்ருலும், விடாப்பிடியாக அழ தூட்டி அக மகிழ்ந்து, 'வா!' என்று கூறி வரவேற்ற, அவ்வூரின் உயர்சாதியினர் என்றபோர்வையிலுள்ளவர்களெல்லாம், இப்பொழுது முகஞ் சுளித்து விலகிச் செல்வதற்கான காரணந்தானென்ன?

பாவம். கமலம்! வாழ்க்கை என்பது துன்பம் நிறைந்த பெருங் கனவென்றே அவளுக்குத் தோன்றிற்று. குழந்தையை நோக்கினுள். ஒரு பெருமூச்சு! அனலின் வெம்மை அதில் ஜ்வாலித்தது. அவள் கால்கள் நகர மறுத்தன. நின்ருள்!

'அத்... தான்!'

'ஹெட் அவுட்...!'—புருஷன் வாயினின்று, சொல்லணுக் குண்டொன்று வெடித்துச் சிதறியது.

'இழி குலத்தாளின் சின்னம் என் வீட்டிலிருக்க அனுமதிக்கமாட்டேன்!'—எனக் கூறிக் கொண்டே, வெறிபிடித்தவன் போல் குழந்தையை நோக்கி ஓடினுன்'

அவனுல் குழந்தைக்கு ஆபத்து வந்துவிடப்போகிறதே என எண்ணியவளாக் குழந்தையைக் கையில் தூக்கினுள்' கமலம்!

'போ!.. அப்படியே போய் விடு!'- கர்ண கடூரமாகக் கத்தினுன், கணவன்!

,...போகிறேன் அத்தான் போ...கிறேன்!...பூதாகரமான இந்த உலகத்தை விட்டே... போ...கி...றேன்!'--குழந்தையைக் கொஞ்சி மார்போடணைத்தான், குலமங்கை அவள் பெற்றெடுத்த அந்தப் பிஞ்சுக் குழந்தையோ, தாயன்பை மறக்காமல் அவளை இறுகத் தழுவிய வண்ணம் உறங்கிக் கொண்டிருந்தது; அர்த்தமற்ற, அக்கிரமம் நிறைந்த, அநியாய உலகில் விழித்திருப்பதே பாவம் என்று நினைத்தது போலும் குழந்தை.

காரியம் கெட்ட போதெல்லாம் 'கண்கெட்ட கடவுளே!' என்பார்களே; ஏன்? கண் கெட்ட காரணத்தால் மட்டும் கடவுள் பேசாதிருக்கமாட்டார்; அக்கிரமங்களைப் பார்த்துச் சகிக்க முடியாமல் தான், அவர் அப்படிக் கண்களை மூடிக்கொண்டிருக்க வேண்டும்.

ஆம்; அப்படித்தான் அந்தக் குழந்தையின் மௌனநிலை விளக்குகின்றது. புத்திமதிகளைச் செவி மடுக்காத புல்லர்களிடம் பேசிப் பயனில்லை என்றுதான். தெய்வம் குழந்தைவடிவில் மௌனமாகக் கண்களை மூடியபடி சயனிக்கின்றதோ?

தாயின் அரவணைப்பில் தன்னிலை மறந்து தூங்கிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையின் வதனப் பிரதிபலிப்புகள் கூட, அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது.

**கண. மகேஸ்வரன்**

---

## சிரித்திரு

பிரபல ஓவியரை ஒரு நடிகை தன் படத்தை எழுதச் சொன்னுள். படம் எழுதி முடிந்த பின். 'படம் அழகாகவே இல்லையே' என்று சுளித்துக் கொண்டாள் அந்த நடிகை.

'நான் என்ன செய்யட்டும் அம்மணி... உள்ளதை உள்ளபடி எழுதினேன்' என்ருர் அவ்வோவியர். ஏன் படத்துக்கு மேக் அப் (ஒப்பனை) செய்திருக்கலாமே என்ருள் அந்த நடிகை.

கானகத்தில் கனி கொய்யச் சென்று, கால் கடுக்காத காரணத்தால் பல காத தூரங்கடந்தவன், அந்திப் பொழுதின் வரவுணர்ந்தவனாக, மனை நோக்கி மீண்டும் கொண்டிருக்கையில் தானே, அவன் கண்களுக்கு அந்தக் கன்னிக்கனி முதல் விருந்தானாள். கட்டான அவள் உடலழகு கண்டு, களிப்பும், மலைப்பும் கொண்டவனாக நிமிர்ந்து, தன்னையே ஏறிட்டு நோக்கிய கோபாலின் கண்களை; இயற்கை இன்பத்தில் (இ)லயித்திருந்த இளநங்கை கமலத்தின் கண்கள் சந்தித்து உறவாடின: இரு சோடிக் கண்களும், அந்த ஒரு நொடிப் பொழுதில் பல கதைகள் பேசி விட்டன போலும். ஒருவரோடொருவர் கதைக்க வேண்டுமென்ற ஆசையால் உந்தப்பட்டவர்களாக, இருவரும் சிறிது நேரம் திண்டாடினார்கள்: கண்கள், மண்ணையும் மேனியையும் மாறிமாறிப் பார்த்தன. அந்த மயக்க நிலை சிறிது நேரம் நீடித்தது. வர்ணிப்பதில் வல்லவனான போபாலால் அவளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை.

---

**கணவன்:** கல்தோன்றி மன் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்கிறார்களே... அடகடவுளே அந்தக் கல் தோன்றாக் காலத்தில் நீ என்னைத் தமிழனாகப் படைத்திருக்கக் கூடாதா!

**மனைவி:** ஏன் அப்படிச் சொல்றீங்க

**கணவன்:** அந்தக் காலத்தில் இருந்த கணவன் சாப்பிடும் சோற்றில் கல்லும் மண்ணும் இருந்திருக்காதே அதுக்காகத்தான்!



---


ஒப்புவமையற்ற உடலழகை மேலும் மிகைப்படுத்திக் காட்டவல்ல கவர்ச்சிமிகு நகைகள் பெற விஜயம் செய்யுங்கள்



## ரஞ்சனா நகை மாளிகை

வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில் அருகில்

377-379, காலி வீதி, பம்பலப்பிட்டி.

கொழும்பு-4. போன்- 85580

## சிரித்திரு

உங்கள் புத்தகம் நன்கு விற்பனையாக வேண்டுமா?— ஹாஸ்ய மன்னனின் யோசனை.

சிறுவர்களை சந்தோஷப்படுத்த நிறையப் படங்கள்.

பெரியோர்களை திருப்திப்படுத்த அறிவு வளர்க்கும் விஷயங்கள்: அதோடு

கரப்பத்தான், அல்லது மட்டத்தேளை அடிக்கும் அளவு கனமுள்ள அட்டை.

'தடாகத்தில் மலர்ந்து சிறக்க வேண்டிய... நீங்கள்... இந்தக் கானகத்தின் மத்தியில்...'—ஆரம்பத்தில் நாத்தடுமாறியது.

'காளையரின் கண்களுக்குக் களிப்பூட்ட வேண்டிய கன்னிக் கனியே! நீ, கழுகுவாழ் கானகத்தில் கண்மலர்ந்திருப்பதேன்? கிணற்றுள் இருக்கும் தவளைக்கு வெளியுலகைப் பற்றித் தெரியாது கண்...ணே! கானியே கனிந்திருக்கும் காந்தக் கனியே சுவர்க்கத்தை உனக்களிப்பேன், என்னோடு வா! வளர்மதியே..! வரச் சம்மதம் தானே...!'—காந்தர்வச் சிரிப்புடன் அவளை நோக்கினான். அவளோ—

நாணிச் சிவந்த முகத்தினளாய், கோணிக் குறுகி நின்றாள்!

அன்று கனிவாகப் பேசி, காதற் கரும்பையும் சுவைத்த கோபாலுக்கு இன்று அப்படி என்னதான் மனக்கொதிப்போ...

'தேனோடு கலந்த தினைமாவின் தீஞ்சுவையால்தான் வள்ளி வேலனை வரித்தாளாம்!? நீயோ ஊனிலே கடைந்த, உன்னரு மேனியின் செருகொன்றால் என் உள்ளத்தைக் கிறுங்க வைத்து விட்டாயே!'—என்பன போன்ற இனிமையான வசனங்களையெல்லாம், தன்னுள்ளங் கவர்ந்த இல்லாளை, மானசீகக் காதலியாக வைத்துக்கொண்டே, கதைகளில் தன் கைவரிசையைக் காட்டினானே? கமலத்தையே தன் கற்பனைக் குழம்பில் குழைத்துச் சுவைத்தானே! அவனா இன்று...?

அவளால் நம்பவே முடியவில்லை.

கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய் என்பார்களே. மாய உலகில் நடப்பதனைத்தும் கனவேயென்று அவளுக்கு அப்போ தான் புலப்பட்டது.

அவள் நினைவுச் சுழலில் பழைய சம்பவங்கள், திரைப் படமாக நிழலாடின!

மூன்று வருடங்களுக்கு முன் ஒரு நாள்...

'எடியேய், உன்னாலை உலகத்திலை கண்முழிச்சு நடக்கேலாமல் கிடக்கடி. பள்ளிக்குப் போறன், பள்ளிக்குப் போறன் எண்டு, அங்கை பொடியங்களோடை கும்மாளம் போடவேடி போறனி பெம்பிளைப் பிள்ளையெண்டால் ஒழுங்காய்ப் போய்ப் படிச்சிட்டு, நேரத்துக்கு வீட்டை வரவேண்டாமே? அங்கையொரு ரீச்சர் வீடு, இஞ்சையொரு பிரண்டு வீடெண்டு சொல்லிக்கொண்டு, நெடுக லாத்திக் கொண்டு திரிஞ்சதுதானேடி உனக்கு வேலை! ஊரார் சொல்லுகிறதை யேனும் கேட்டு நடந்தால் தானே. எனக்கென்ன?... நான் உன்ரை நன்மைக்குத் தானே

### சிரித்திரன் சந்தா விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ——————————————————

விலாசம்: ——————————————————

——————————————————

1 வருட சந்தாப் பணமாக ரூபா 6/-

6 மாதச் சந்தாப் பணமாக ரூபா 3/-

இத்துடன் அனுப்புகிறேன். ஏற்றுக்கொண்டு ———— மாதம் தொடக்கம் சிரித்திரனை அனுப்பிவைக்கவும்.

——————— ——————————

திகதி கையொப்பம்

(பணத்தைப் போஸ்டல் ஓடராக, மனேஜர் சிரித்திரன், 101/4 செ்ன். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.)

## சிரித்திரு

செஸ்டர் பீல்ட் பிரபுவை சந்தித்த ஒருவர் உலகில் மனித னுக்கு மட்டுமே சிரிக்கக் கூடிய சக்தியிருக்கிறது என்றார். ஆம் அதோடு சிரிப்புக்கு இடமாக நடந்து கொள்ளவும் அவனால்தான் முடியும் என்பதையும் அதோடு சேர்த்துக் கொள்ளுங்கள் என்றார் செஸ்டர்பீல்ட் பிரபு.

சொல்லுறன்... ஒரு கலியாணத்தையும் கட்டிப் பத்துப் பதினைஞ்சு பிள்ளை குட்டியளையும் பெத்தாப் போலேதான் தெரியும். இப்ப ஏதோ என்னாலை... நானும் இயண்ட் வரை...' தாயின் வசை வெள்ளத்திலே எதிர் நீச்சலடித்தாள், கமலம்.

'...போதும் உன் பிரசங்கம்' உன்னாலை ஏலாவிட்டால், என்னைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்!'— கண்ணீரைப் பெருக்கிக் கொண்டே, '...நானிருக்கிறதாலை ஒருத்தருக்கும் லாபமில்லை. அ...அ...ஆ... (அழுகை)... நான் மட்டும் செத்துப் போனால்...'— குமுறினாள், கொவ்வைச் செவ்விதழாள்.

...'ஓ!... நீங்கள் செத்தால் இஞ்சை கடலெல்லாம் கஞ்சியாய் போகிடும்...? ஆரைப் பயப்படுத்திக் காட்டுறியள்?... சாகில் சாவுங்கோவன்! இஞ்சை ஆர் இழுத்துப் பிடிக்கினம்...?'— பொரிந்து தள்ளினாள், பெற்றவள்.

'...இப்ப என்ன... செய்யிறன் பார்!...'— கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ஆவேசங் கொண்டவள் போல் ஓடினாள் கமலம்.

...மூதேசியள் இருந்துதான் என்ன பிரயோசனம்? ஒவ்வொரு தரும் நையாண்டி செய்யாமல்... செத்துப் போனால் ஒருநாள் கவலை. சும்மா நெடுக...'—தன் பாட்டில் புறுபுறுத்த தாயானவள், சற்று நேரம் பொறுத்துப் பார்த்தாள். மகளின் சத்தடியையே காணவில்லை. பெற்ற மனமல்லவா?... பித்தாய்ப் பதறியது.

'...ஐயையோ ஆத்திரத்தில் அவள் எதையாவது செய்து விட்டால்...'— அதற்கு மேல் அவளால் எதையும் நினைக்க முடியவில்லை.

'கமலா! எடியேய் பிள்ளை! கமலா!' கத்திச் சத்தமிட்டாள்.

எதற்கும் பதிலில்லை.

வீடு, குளம், கோயில், கிணறெல்லாம் தேடியாயிற்று. மன உளைச்சலும், சேர்ந்து வாட்டக் கவலைமீதுற்றவளாய்க் கண்ணீருகுத்தாள், கமலத்தைச் சுமந்தவள்.

கமலம் எங்கே போனாள்? என்ன ஆனாள்? கணவனுக்கு என்ன சொல்வது?— என்றேதும் அறியாதவளாய்த் தேம்பித்தேம்பியழுது செயலிழந்தாள். அவளுள்ளத்தில் ஆயிரமாயிரம் கவலைகள் தேங்கி நின்றன.

இஃதிவ்வாறாக...

பிறந்த வீட்டைத் துறந்து, செய்வதறியாது திகைப்புற்றுப் பொருமிய முன்கோபி கமலமும் மூர்ச்சையுற்றாள். தற்கொலை செய்யுமளவுக்குத் தாழ்ந்த அவள் மனம், எப்படியோ தேறித் தன் முடிவை மாற்றிக் கொண்டது. 'எப்படியாவது வாழத்தான் வேண்டுமென்ற நோக்குடன் ஊரெல்லையைத் தாண்டிவிட்டாள்.

'கற்பைக் காக்கும் கன்னியருக்கே களங்கம் கற்பிக்கும் கலியுகத்தில் கல்யாணத்தையும் கட்டிக் கொண்டால்...வேண்டாம் இந்த அவலம்! சுதந்திரக் கன்னியாக... கை படாத கனியாகக் காலத்தைக் கழிக்க வேண்டும்' என்ற முடிவுடன் அன்று புறப்பட்டவள் தான்...!

---

அம்மணி: (சைவ கடையில்) நேற்று என் மகன் ஒரு ராத்தல் இனிப்பு வாங்கிக் கொண்டு வந்தான். நிறுத்துப் பார்த்தால் அரை ராத்தல்தான் இருக்கு. உங்க திராசிலே ஏதாவது வித்தியாசமா சார்...

கடைக்காரர்; எங்க திராசு சரியாத்தானே இருக்கு... ஆமா... உங்க மகனை நிறுத்துப் பார்த்தீங்களா?...

அம்மணி; ...?...?...

தன்னிலையையும், சுற்றுடலையும் மறந்தவளாகக் கத்தினாள் கமலம்— 'ஐயோ, கடவுளே!... அன்றே நான் செத்திருக்க கூடாதா? எனக்கேன் வாழ்வு கொடுத்தாய்? என் போன்ற அபலைகளுக்குத் தொடர்ந்து வாழ்வளிக்க நினைப்பாயானால்... உன் கண் கெட்டுப் போகட்டும்! தலை சுக்கு நூறாக வெடிக்கட்டும்! கோவிற் சிலைகளெல்லாம் புதைந்து ஒழியட்டும்! கோயில்களெல்லாம் கொடியவர்களின் பாசறையாகட்டும்! நீதி நிலைக்காமல் போகட்டும்! நிலவுலகமே நீறாகட்டும்! ஆண்டவன் என்ற சொல்லே அஸ்தமிக்கட்டும்! கடவுளே...! கண் கெட்ட கடவுளே...! நீ கெட்டுப்போ! கெட்டுப்...போ! ...கெட்டு...'

பித்துப் பிடித்தவள் போல் பிதற்றியவள், பேச்சு மூச்சற்று நிலத்தில் வீழ்ந்தாள்.


நெல்மணிக் கதிர்கள் முற்றித் தலைவணங்கும், பரந்த வயற் பிரதேசம் தூரத்தே மரங்களடர்ந்த சிறு கானகம். காட்டு யானைகள் அடிக்கடி விஜயஞ் செய்யும், ஏகாந்தரமான சூனியப் பிரதேசம், அது!

மயக்கநிலை தெளிந்தவளாகக் கண்விழித்தவள் அங்கு கண்ட காட்சி...

மதங்கொண்ட யானையொன்று, மழலைக் குழந்தையைத் தூக்கிப் பந்தாடிக் கொண்டிருந்தது. சுற்று முற்றும் பார்த்தாள். கூப்பிடு தூரமொன்றிற் கப்பால் நர்த்தனம் புரியும் வெறி பிடித்த யானையைத் தவிர, அங்கு வேறெவருமில்லை, அவள் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது, வேங்கை போல் பாய்ந்து வீழ்ந்து விழுந்தோடினாள்.

'ஏய்! குழந்தையைக் கொல்லும் மூர்க்கப் பிறப்பே..., என்னையும் கொன்று விடு! குலக் கொழுந்தை கொன்று குதூகலிக்கும் கொடுங்கரியே, என்னைக் கொன்று விடு!'— யானையை நோக்கி ஓடினாள் கமலம் பூங்கொடி.

பகுத்தறிவற்ற விலங்கிற்கு இதெல்லாம், எங்கே விளங்கப் போகிறது? குழந்தையைப் போட்டுவிட்டு, பயிர்களை அழித்த வண்ணம் கானுட் சென்று மறைந்தது, ஓடோடிச் சென்று தன் செல்வத்தைத் தூக்கினாள். பால்வடியும் கடைவாயில், குருதி கசிந்தது, பதறினாள் அன்னை. முந்தானை கொண்டு, குழந்தையின் முகத்தைத் துடைத்தாள். புன்னகை தவழ வேண்டிய அதன் வதனம், பொலிவிழந்து பொருமியிருந்தது. அன்னையின் விழிகள் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கின. கொளுத்தும் வெயில், பாதத்தைச் சுட்டெரிக்க, குழந்தையை ஏந்தியவண்ணம் திரும்பி ஓடினாள்—காப்பாற்றும் பொருட்டு




குழந்தையிடத்திருந்து சிறு முனகல், ஒரு நெடு மூச்சு, 'திக்' கென்றது அவள் இதயம் குழந்தையின் சர்வ நாடிகளும் அடங்கிவிட்டன. இனி..

இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. ஆனாள்... அவள் கண்கள் கலங்கவில்லை. கண்ணீராறு தான் வற்றிவிட்டதே. ஊற்றில்லாத தடாகத்தில்.. எல்லாவற்றையும் துறந்த நிலையில் ஒரு ஏக்கப் பெருமூச்சில்!

அம்புலிமாமா

சிறுவர் சிறுமியர்
விரும்பிப் படிக்கும்
மாதப் பத்திரிகை

இலங்கை முழுவதும்
சப் ஏஜண்டுகள் தேவை.

சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பாதையை மாற்றினாள். கானகத்தை நோக்கி அவள் கால்கள் நகர்ந்தன.

'நல்லவர்க்கே காலமில்லை. அரவந் தீண்டி இறந்த தன் மைந்தனின் பிரிவாற்றாது பேதலித்த சந்திரமதியின் நிலை, இன்று எனக்கும் வந்துவிட்டதே. பிழையுணர்ந்த விஸ்வாமித்திரன், அவள் வாழ்வுக்கு விளக்கேற்றினான்'— அது கதை! எனக்கு வாழ்வளிக்க எந்த விஸ்வாமித்திரன் வருவான்?'— அவள் உள்ளம் தன்னுள் உன்னியது.

படித்த கொடியவர்கள் உலவும் நாட்டில் வாழ்வதிலும், கொடிய விலங்குகளின் காட்டில் மடியலாம் என்ற நோக்குடன் புறப்பட்டாள்'

கலைந்த கூந்தல் காற்றிலே படபடக்க; கண்ணீர் வற்றிய கண்கள், விரிந்து வாடிய தேனற்ற மலராய்க் காட்சியளிக்க; வலுவிழந்த கரங்கள், மகளை வாரியணைத்திருக்க, நடைதளர்ந்த மயிலன்ன மங்கை நல்லாள், மாசு கொண்ட மாந்தரைச் சுட்டெரிக்கும் பாவனையில் வீறுகொண்ட வேங்கை போல் மீண்ட வலு மீட்டியவளாய்க் கான் நோக்கிக் கடுகி வழிநடந்தாள்.

புன்னகையின்றிப் பொலிவிழந்த பொன்மேனிப் பொற்குழந்தை வதனத்திலோ, என்றுமில்லா அமைதியொன்று எக்காளமிட்டது, உயிரற்ற உடல் கொண்ட அக்குழந்தையின் வதனத்தில், உயிர்ப்புள்ள ஒளியொன்று பிரகாசித்துக் கொண்டேயிருந்தது. இறைவன் என்றும் சாந்த சொரூபியே என்பதைப் பறைசாற்றுவதாயிருந்தது அக்குழவியின் மோனநிலை.

கமலத்தின் நிலை இதுவாக, கணவன் கோபாலோ...

'...அட கடவுளே! இதுவும் உன் சோதனையா? தந்தை செய்த தவறுக்காக, என் தங்கம் தவிக்க வேண்டுமா...?'

'...பாலு! இவளை இனி எங்கேடா தேடப் போறேன்? அவள். அவள்... ஐயோ! கமலா கதறிக் கொண்டே ஓடினான் கோபால். உடலில் ஒரே பதற்றம்.

'பாலுவின் தாய்க்கும், உன் தந்தைக்கும்... பாலுஉன் ஒன்றுவிட்ட சகோதரன் என்பதை கூறினால் சத்தியம் கெட்டுவிடுமே என்று, என்னிடத்திலேயே மறைத்து வைத்த கொடுமை தான் உனக்கு... கமலா! என் அன்பே...! உண்மை அன்பின் உறைவிடமே! உனக்கு நான் கொடுமை செய்திட்டேண்டி... கொடுமை செய்திட்டேன்! எனக்கு இது போதாது...!'...சுற்சுவரில் தலையை மோதியுடைத்துப் புலம்பினான்.

'இனி எங்கு தேடுவேன்? இந்தப் பிறப்பில் இனி அவள் போலொருத்தி கிடைப்பாளா? கமலா! கமலா!! என் கமலா!'

காலங்கள் பல காற்றாய்ப் பறந்த பின்பும், 'கமலா' என்ற சொல், அவன் வாயினின்று வெளிப்படத் தவறவில்லை. அவன் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாக அவள் பெயரை உச்சரிக்க வேண்டியது தான், அவனுக்கு விமோசனம் தருவது போலும்.

அவன் இப்பொழுது ஒரு பைத்தியம்.

நடைப்பிணமாக வாழ்வை- வாழ்க்கைப் படகை ஓட்டிக் கொண்டிருந்தான். அது நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அன்றறுப்பது அரசன் செயலானால், நின்றறுப்பது அரனின் செயலாகும்.

தன் கணவனுடன் வாழ்நாளெல்லாம் வளமாக வாழவேண்டுமென நினைத்த கமலத்தின் கற்பனைக் கோட்டை...

உண்மை உணர்ந்தபின், உரியாளுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென நினைத்த போலின் ஆசைகள்...

தன் குழந்தையாவது சிறப்பாக வாழ வேண்டுமென்ற கமலத்தின் கனவு...

அத்தனையும் வெறும் 'நிராசை' தான்.

ஆத்திரத்தின் தோற்றமன்றோ, அத்தனைக்கும் காலாகி விட்டது.

பொறுமைக்கு ஒருபோதும் அழிவில்லை!




# காகித ஓடம்....கடலலை மீது....

"தாம் பூலம்"



ஹோ என்ற இரைச்சலுடன் புரண்டு புரண்டு வரும் அலைகள். அமரும் அலைகளினூடே தெரியும் கரை.

நீந்துகிறேன்... நீந்து... கிறேன் கால்கள் சளைத்து விட்டன, ஒலிம்பிக்கில் ஓடியவன் போல.

'அதோ கரை தெரிகிறதே .. இன்னும் இரண்டே எட்டுக்கள் கையை வீசிப்போடு... கரை சேர்ந்து விடலாம்! என் ஆத்மாவின் ஒரு மூலையில் ஒரு முனகல்.

கையை எட்டிப் போடுகிறேன். இன்னும் சில யார்கள் தான். அப்பாடா... ஒருவாறு கரை சேர்ந்து விடலாம் என்று கொக்கரிக்கிறது என் மனம்.

ஐயோ... இது என்ன?...ஒரு ராக்ஷஸ அலை.

மீண்டும் கடலை நோக்கி இழுத்துச் செல்லப்படுகிறேன். கைகளும் களைத்து விட்டன. தலை தண்ணீருக்குள் ஒருமுறை இரு முறை தாழ்கிறது,

'மடக்' 'மடக்' என்று இரு வாய் தண்ணீர் உள்ளே போகிறது,

மூன்றும் முறையாக மேலே வருகிறேன்.

தூரத்தில் அழகாக தெரியும் கரை. அமெரிக்கன் மாடல் வீடுகள். வெளியே கட்டை கவுன் சகிதமாக கவலையற்று நிற்கும் கன்னியர் சிலர்.

சிரிப்பா— எனக்கா ... ஹூம் நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்,

சிட்டுப் போன்ற சிறிய மனைவி ... சிரிக்கச் சிரிக்க விளையாடும் மூன்று செல்வங்கள்.

சிந்தனைப் பாரத்தால் தலை கவிழ்ந்திருக்கும் ஒரு கிழம்... அவள்தான் என்தாய்.

இவர்கள் யாவருக்கும் நான் இரந்த காலமாய் விடுவேன் இன்னும் சிறிது நேரத்தில்,

பிறகென்ன... என்ன? எல்லோரும் அழுவார்கள்.

'ஐயோ ராசா என்னை விட்டுட்டு போயிட்டீங்களே... இனிமே நான் என்ன செய்வேன்

இப்படி அழுவான் என் மனைவி.

'அப்பா...அப்பா...அப்பா.. என்று அலறுவார்கள் என் செல்வங்கள்'

'அடோ உம்பட்ட தன்ன வாதே. அபே தாத்தா மரிலா... மினி பெட்டிய... மல் மலாவ... லொக்கு கார் ஒக்கோம தங் யெய்.'

[டேய் எங்கப்பா செத்துப் போயிட்டார்டா... பெட்டி, மாலை, பெரிய கார் எல்லாம் இப்ப வருமே]

என்று தன் நண்பனிடம் பெருமையடித்துக் கொள்வான் என் கடைக்குட்டி.

அவனுக்கு வயது நான்கு.

[நாங்கள் சிங்களச் சகோதரர்கள் மத்தியில் வாழ்வதால் அவனுக்கு தூக்கத்தில் கூட சிங்களம் தான் வரும்]

## துணுக்கு

என்ன அம்மா இந்த ஆயாவுக்கு வேலை தெரியாது போலிருக்கிறதே!

ஏன் டார்லிங்...

இரவிலே தூக்கம் வராத நேரத்திலே, தூங்கு தூங்கு என்று பேசுறு... காலையிலே நல்லா தூங்கறப்போ... எழும்பு எழும்பு என்று வெரட்டுறுவே...



# சித்திரமும் சிறுகதையும்

அழகு பூத்துக் குலுங்குகிறது. இளமை ரசித்து இன்புறுகிறது. அமலனுக்கு முன்னால் அழகு நங்கை அவன் மனதிலோ ஆயிரம் எண்ணங்கள், அவன்...... அவள்— அவள்...... அவன் உங்களுக்கு என்ன தோன்றுகிறது.

சிறுகதையாக வடித்து சித்திரனுக்கு அனுப்புங்கள். கதை சாதாரணத்தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். முடிவுத் தேதி: 20—11—1969.

சாவைக் கண்டு அழும் வயதல்லவே அவனுக்கு.

'இப்போது ஏன் கலங்குகிறாய். இது நீயாகத் தேடிக் கொண்ட முடிவுதானே; வந்து விழு என்று நானா அழைத்தேன்.

அலைகளின் இரைச்சலுக்கு அர்த்தம் என்று ஒன்று இருந்தால் அது இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

ஆம் இன்னும் சில நிமிஷங்களில் மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் நான் இறந்த காலமாய் விடுவேன்.

ஏன் இவ்வளவு நாட்கள் மட்டும் என்ன வாழ்ந்ததாம். வீட்டை பொறுத்த வரை நான் இறந்தவன் தானே!

அதாவது...வாழ்வில் முதல் தோல்வி ஏற்பட்ட வரை...


இருந்த உத்தியோகத்தை இழந்த வரை... மனைவியின் நகை நட்டுக்கள் ஒவ்வொன்றாக லைசன் கடைக்குபோகும் வரை.

உயிருள்ள வகை இருந்தேன் ஆனால்...

கலையை நம்பி... கை நிறைய பணம் கிடைத்த உத்தியோகங்களை உதறிவிட்டு இன்று அரசனை நம்பி புருஷனை கைவிட்ட புண்ணியவதிபோல்.. கலையுலகாலும் கை விடப்பட்டு, நிராதரவாக என் குடும்பத்தவர்கள் மட்டுமல்ல... என் வயிற்றையே கழுவ முடியதா நிலையில் இருக்கிறேனே! இதைவிடவா தற்கொலை கசப்பு.

'நீ தேடி வந்த முடிவை நான் உனக்களிக்கிறேன். கடைசி முறையாக உன் இஷ்ட தெய்வங்களை பிரார்த்தித்துக் கொள்.

ஆண்டவனே... எனக்கு இனி பிறவியே அளிக்காதே...




அப்படி செய்த பாவத்தைத் தொலைக்க... பிறக்க வைத்தாலும்... இந்த கலை பைத்தியத்தை மட்டும் இம்மியளவு கூட வைத்து விடாதே'

என் மனம் ஆண்டவனை வேண்டியது. கைகள் தாமாகக் குவிந்தன!

தலைக்கு மேல் தண்ணீர்... மூச்சுத் திணறுகிறது... மூக்கில்... வாயில்... வயிற்றில் தண்ணீர்... தண்ணீர்... தண்ணீர்...

என் வாழ்வு... முடிந்... து...

'ஐயா... நீங்க தெய்வம் மாதிரி... எங்க எல்லார் வயித்திலேயும் பாலைவாத்தீங்க...' என் மனைவியின் குரல்...

'அது இதுன்னு சும்மா... ஒப்பாரி வைக்காதே...ன்னு வாய்க் கொருதரம் சொன்னேனே கேட்டியாடி... இவன் கண்ணை மூடியிருந்தா... கிடைக்கற அறை வயித்து கஞ்சி கூட கிடைக்காதேடி...'

என் அம்மா கூட வந்து விட்டாளா... கடற்கரைக்கு... அப்போது... நான் இன்னும் சாகவில்லையா... கண்களை விழித்துப் பார்க்கிறேன். ஷர்ட் காலரை தூக்கிவிட்டுக் கொண்டு பெருமை பொங்க நிமிர்ந்து நிற்கிறார் திரு....பொன்னம்பலம்

என் பக்கத்து வீட்டுக் காரர்...

'ஏன் தான் இவனுக்கு புத்தி இப்புடி போச்சோ! நாலு பிள்ளைகளையும்; பெண்டாட்டியையும், பேர்தாக் குறைக்கு தாயையும் ரோட்டிலே நிறுத்திட்டு .. இவன் மட்டும் நிம்மதியாகப் போகப் பார்த்துட்டான். நல்ல நேரம்... நான் கடற்க் கரைக்கு வந்தேனே .. நான் எப்படி எழுந்தேனே! எனக்கே தெரியாது...

டமார்... டமார்...

இரண்டே குத்து...

திருவாளர் பொன்னம்பலத்தின் மூக்கால் இரத்தம் ஓடியது.

'என்ன மிஸ்டர்... தற்கொலை பண்ணிக்கபோன என்னை காப்பாதிட்டதாக பெருமை பேசறியே என் பக்கத்து வீட்டுக் காரன் தானே நீ... நானும்... என் பெண்டாட்டி, பிள்ளைகளும்... பட்டினியாலே ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் பட்டினி கிடந்தப்போ... திரும்பி பார்க்காம இருந்தியே நீயா... என்னை காப்பாத்தினே!

'பசி...பசி... அப்பா பசிக்குதுன்னு அழுத சின்னப் பயலுக்கு கால் ராத்தல் பான் வாங்க.. ஒன் வீட்டு படியேறி வந்து ஒங்கிட்டே 25 சதம் கேட்டு வந்தப்ப...

'ஐயாம் சாரி... சில்லரையில்லை என்னு சொன்னியே .. நான் வெளியே வந்தப்பறம் தரித்திர நாய்க் கெல்லாம் பிச்சை போட, இது என்ன பிள்ளையில்லாத சொத்தா...ன்னு ஒன் பெண்டாட்டிகிட்டே சொன்னியே... என்னைக் காப்பாத்த உனக் கென்ன உரிமை.. உனக் கென்ன உரிமை...

அங்கு நிலவிய மரண அமைதியில் கீச்சென்று பயங்கரமாசலம் ஒலித்தது என் குரல்...

போட்டோ ரெக்ஸ்
நீ: 10, அப்துல் ஜப்பார் மாவத்த, (மெசஞ்சர் வீதி)
கொழும்பு-12.
போன்: 35237

அவசரகால பாஸ்போர்ட் முதல் அலங்கார கல்யாணப் போட்டோ வரை அதிவிரைவில் அழகாகப் படம் பிடித்துக்கொள்ள தற்கு எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

## நான் செய்த குறும்பு

ஒவ்வொரு நாளும் சரியாக மணிக் கூடு ஒன்பதடிக்கும் சமயம் நான் பஸ்ஸுக்கு காத்து நிற்பேன். அங்கு அவரும்வந்தது நிற்பார். நான் அங்கு இங்கு பார்க்கும் போது என்னையே பார்க்கும் அவர் அவரை நேரடியாகப் பார்த்தால் என்னைப் பார்க்காதது போல் மறுபக்கம் திரும்பிக் கொள்வார்.

அன்று எப்படியாவது என்னுடன் பேச வேண்டு மென்று கங்கணம் கட்டி வந்திருப்பார் போலிருக்கிறது.

என்ன வெல்லாமோ கேட்டார். என்ன வெல்லாமோ பேசினார். ஒரே காதராவி'

இங்கே ஏன் பஸ் ஸ்டாண்டில் நின்று பேச வேண்டும். எங்கள் வீட்டிலே என்னுடன் பேசலாமே என்றேன்.

ஆஹா இந்த மட்டுமாவது பேசு என்கிறாளே என்று அவருக்கு ஒரே சந்தோஷம் போலிருக்கிறது.

நான் எப்ப வீட்டுக்கு வர என்றார்,

ஊசி நுழைய இடம் கொடுத்தால் ஒட்டகத்தையே நுழைப்பவர் ரகம் போலிருக்கிறது.

'ஐய்யயோ... டெலிபோனில் பேசுங்களென்றால்... டெலிபோன் நம்பரைக் குறித்துக் கொண்டார்.

அடுத்த நாள் அவரை ஸ்டாண்டில் காணவில்லை;

அதற்கு அடுத்த நாள் வந்தவர் என்னிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. நான் வற்புறுததியபோது.

'சரி சரி உன்னோடு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது— வீட்டு நம்பர் என்று சொல்லி மிருககாட்சி சாலை நம்பரைக் கொடுத்திருக்கிறாயே! என்றார்.

எப்படி என் குறும்பு;

மனோன்மணி

இதுபோல் உங்கள் குறும்பை எழுதியனுப்புங்கள்

## சிறுகதையில் ஒரு சிறு சுவை


'அன்றுதொடக்கம் மீண்டும் மீண்டும் என்னைப் பார்க்க எத்தனை விதமாகத் தெண்டித்திருக்கிறீர்கள். எத்தனை தந்திரம் செய்திருக்கிறீர்கள். எங்கள் வீட்டு பொல்லாத நாய்-வீமன்-அதற்கு எங்கள் ஊரே நடுங்குமே அதைக் கூடத் தாங்கள் ஒரு திரணமாக மதிக்கவில்லையே

அன்றொரு நாள் மத்தியானம் அதை நினைத்தால் எனக்கு இப்பொழுதும் சரீரம் நடுங்கும். அப்பா சாப்பாடு முடிந்து அயர்ந்து தூங்கும் நேரம்;

நீங்கள் கிணற்றோரத்தால் வேலியைக் கடந்து மெல்ல, மெல்ல வரும்போது, உங்களை வீமன் கண்டு துரத்தியது, நீங்கள் ஓடிப்போய் மாமரத்தில் ஏறினீர்கள். அந்த பொல்லாத நாய் அந்த அளவில் விடாமல் மாமரத்தை சுற்றிச் சுற்றி குலைத்து வந்தது. அப்பாவின் தூக்கம் கலைந்து, எழுந்து எண்ணெய் பூசி மினு மினுப்பாக வைத்திருந்த துப்பாக்கியையும் தூக்கிக்கொண்டு மாமரத்தை நோக்கிச் செல்ல நான் பயந்த பயத்தை நினைக்க இப்பொழுதும் பயமாய் இருக்கிறது. தங்களை சுட்டு வீழ்த்திப் போடுவாரோ என் நடுங்கினேன்'

அப்பா அண்ணாந்து பார்த்துத் தாங்கள் எனக்கண்டதும் 'நன்றாகப் பழுத்த பழங்கள் என்னிடம் வீட்டில் இருக்கின்றன. என்னைக் கேட்டால் கொடுத்தனுப்பியிருப்பேனே' என்று தங்களை கூட்டிக் கொண்டுபோய் மாம்பழம் கொடுத்தனுப்பினாரே அப்போதெல்லாம் கடவுள் எங்களுடைய பக்கம் என்று பேசிக் கொள்வோம் அல்லவா?'

[கசின் எழுதிய பிழையும், சரியும் என்ற கதையிலிருந்து]



நீ என்னைக் கலியாணம் முடித்தது என்னுடைய உத்தியோகத்துக் காகத்தானே.

# யாரோ...இவர்!

புரட்டுக் கதை

ஆஸ்பத்திரியின் ஒரு தனி அறை வெளியில் ஒரே கூட்டம். டாக்டரின் பூட்ஸ் 'டக்' 'டக்' என்று பூட்ஸ் ஒலி:

'டொக்' 'டொக்' என்ற நர்ஸின் ஹைஹ ஹீல் ஷூவின் தொடர்ந்த ஒலி வெளியில் இருவர் வந்தால் உள்ளே நால்வர் ஓடுகிறார்கள்.

ஒரே சுருசுருப்பு.

முதலில் ஒரு கொன்ஸல் தொடர்ந்து ஏ 40, அடுத்து ஒரு பெரிய கப்பல் கார், ஒவ்வொரு காரிலிருந்தும் டெரிலின் சட்டைகள், ஐ. சி. ஐ, கலசான்கள், டைபின்கள், கப்லிங்கஸ்.

பிரபலங்கள் இறங்குகின்றன நடுவில் இரண்டொரு வேஷ்டிகள், தேசிய உடைகள்.

கூடி வெளியே நிற்பவர்கள் 'குசு குசு' வென்று தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்,

ஒரு வேஷ்டிக்காரர் மேல் துண்டினால் அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.

'பாவம் . நோயாளி நெருங்கிய சொந்தம் போலிருக்கிறது'

'டேய்.. யாராவது சினிமா ஸ்டாரோ.'

இல்லேடா.. நிச்சயமாக ஒரு மந்திரியாகத் தான் இருக்கும். இல்லே அட்லீஸ்ட் ஒரு எம், பி யாவது இருக்கும்டா...

போடா... போடா... சினிமாஸ் ஸ்டார்; எம். பீ. மந்திரிமார் இவங்களா இருந்தால் பிரஸ் போட்டோ கிராபர், கையெழுத்து வேட்டைக் காரர் இவங்களெல்லாம் எங்கடா காணோம்.

இப்படி பக்கமாக நின்ற மூவர் பேசிக் கொள்கிறார்கள்.

உள்ளே இருப்பவர் யாரென்று அறிய வேண்டும் என்ற ஆவல் மெதுவாக தலே நீட்டிப் பார்த்தேன். நோயாளியின் கட்டிலேச் சுற்றி ஒரே கூட்டம்;

ஒருவர் தோடம் பழத்தை உரித்துக் கொண்டிருக்கிறார்.

மற்றவர் ஹார்லிக்ஸ் அடித்துக் கொண்டிருக்கிறார்.

ஓஹோ .. இவர் நிச்சயமா ஒரு பெரிய சமயத் தலைவராகத்தான் இருக்க வேண்டும்.

அருள்ராஜ்

டக்... டக்.. டக்... டக்... டொக். டொக்...டொக்... டாக்டரும் நர்ஸும் வெளியே வருகிறார்கள்.

வெளியில் நின்றவர்கள் அவர்களை சூழ்ந்து கொண்டு கேள்விமேல் கேள்விகள் போட்டுக் கொண்டு நடக்கிறார்கள்.

கோட்டடியில் புரொக்டரை சுற்றிக் கொண்டு ஓடுவார்களே அதுபோல.

ஸார் அவருக்கு இப்ப எப்பிடியிருக்கு.

பரவாயில்லே...

பொழைச்சுடுவாரா சார்..

அதை நான் எப்படி சொல்ல முடியும் நான் என்ன கடவுளா?

செலவைப்பத்தி யோசிக்காதீங்க டாக்டர் நல்ல மருந்து இன்ஜெக்ஷன் எல்லாம் போட்டு பில்லே எங்களுக்கு அனுப்பிடுங்க கப்பல் கார் பேசுகிறது.

உள்ளே படுத்திருக்கும் நோயாளியைப் பற்றிய என் நல் அபிப்ராயம் நிமிஷத்திற்கு நிமிஷம் ஏறுகிறது.

அடேயப்பா எவ்வளவு பேர்கள் அவர் உடம்பைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்.

இரண்டொருவர் கண்ணீர் கூட விடுகிறார்கள் என்றால் உள்ளே இருப்பவர், எத்தனை பெரிய மனிதராக இருக்க வேண்டும்.

'அந்தோணியாரே... எப்படியாவது அவரை பொழைக்க வைச்சுடு அப்பனே... உனக்கு பெரிய நன்றியறிதல் பூசை போடறேன்' மனமுருக வேண்டியவாறே கண்களை துண்டினால் துடைத்துக் கொண்டிருக்கும் வேஷ்டியை நெருங்கினேன்.

'பாவம் ரொம்ப வருத்தப் படுறீங்க... நோயாளி ரொம்ப நெருங்கிய சொந்தம் போல இருக்கு'

(இப்போது புரட்டுங்கள் மறுபக்கத்தை)

## சிரித்திரு

ஒரு யார் டீ

ஆங்கிலேயர் ஒருவர் இலங்கையிலுள்ள சைவ ஹோட்டல் ஒன்றிற்குள் தேனீர் அருந்துவதற்காக நுழைந்தார். அங்கு தேனீர் தயாரிக்கும் முறையைப் பார்த்துவிட்டு ஒரு யார் டீ கொண்டு வரும்படி ஆடர் செய்தார்.

# ஏழையவள் என்ன செய்ய

பருவத்தாய் பெற்றெடுத்த சிறுகுழந்தை
பலநேரம் ஏழையிடம் விளையாடும்
திருமணத்து முன்னந்த அன்றிலினை
தெளிவான ஓடைநீராய் அன்புகொட்டும்
உறவாலே பலநாளும் பணமுள்ளோர்க்கு
உண்டாகா மழலையென்னும் மணிவிளக்கு
பிறப்பதற்கு முந்துகிறேன் எனமுளைக்கும்
பெருமுள்ளாய் அவள்வயிற்றை தினம்துளைக்கும்.

பணமுள்ளோர் பலபேரைக் கைபிடிப்பர்
பருவத்து விளையாட்டு அவர்க்குமுண்டு
மணமாகு முன்னுக மழலையென்னும்
மணிவிளக்கு உதிக்குமானல் என்னகவலை?
கணம்கூட பொறுக்காது கலைப்பதற்குக்
கட்டாகப் பணம்விடுத்து நிலைமறைப்பர்
பணமில்லா ஏழையவள் என்னசெய்ய?
பட்டத்தைக் கொடுப்பதற்கா ஆட்களில்லை!

பகலெல்லாம் தொழிலாளி உழைத்துவிட்டு
பசியாறப் பைங்கொடியை நெருங்கலுண்டு
தகுமோநீ செய்கின்ற செயலுரிமை
தனையுடையோன் நீயென்ருல் ஏழைவீட்டில்
குபுகுபுக்கும் வெள்ளமென பிள்ளைகளைக்
கொடுக்கிருய். கோவிலிலே குளத்தினிலே
வேகாத கொல்லுகின்ற வெய்யில்வருத்த
வெளிவந்து வேண்டுவோர்க்குப் பிள்ளையில்லை.

சேலம் —கு. லோகநாதன்

## யாரோ....இவர் ——தொடர்ச்சி

'அட ஏன் ஐயா நீ வேறே என் வயித்தெரிச்சலை கொட்டிக்கறே' எனக்கு மட்டும் ரூபா இருபதினுயிரம் தரணும்யா. வந்திருக்கறவனெல்லாம்... கடன் கொடுத்தவங்க.

திடீர்னு உயிரை விட்டான்னு, எங்க கதியெல்லாம் என்னுகிறது. அதுதான்யா தவிக்கிரும்.

ஒருவர்: என்ன சாஸ்திரியார் என்னுடைய மகனின் சாதகம்பார்த்து அவனை ஒருவரும் தேட மாட்டார்கள் என்று கூறினீர்களே. இப்ப பார்த்தீர்களா போலீஸ் தேடி அலைகிருர்கள்.

நளினி

---

ஒருவர்: என்ன தம்பி கை, கால் எல்லா இடமும் தழும்பு.

பையன்: அப்பா பிஸினெஸா ஆலை வந்து ஒவ்வொரு நாளும் நாலு, ஐந்து அடி போடுவார். நான் பிறந்த தாலேதான் அவருக்கு பிஸினேஸ் டவுனுப் போகுதாம்.

தாரணி

---

அவர்: என்னப்பா நீ வீரபாண்டிய கட்டைபொம்மனைப் பற்றி இவ்வளவு பயந்து, பயந்து பேசினே!

பேச்சாளர்: என்னப்பா செய்யறது பழைய சடங்காரன் ஒருத்தன், முன் வரிசையிலே இருந்தான்.

---

எல்லோரையும், பயத்தில் மயிர் கூச்செறியும் கதைகளை எழுதி புகழ்பெற்ற எழுத்தாளர்......க்கு தலை ஒரே வழுக்கை.

பீடி புகைப்போருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

# யானை பீடி ஸ்பெஷல்

குணம் மணம் நிறைந்தது

ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே.

இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப் படுவதும், தனக்கென ஒரு தனியிடத்தை வகுத்துக்கொண்டதும்

ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே.

எல்லோரும் விரும்பிப் புகைப்பதும், எங்கும் சுலபமாகக் கிடைக்கக்கூடியதும்

ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே.

உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளியுங்கள்!

தயாரிப்பாளரும் விநியோகத்தர்களும்:

**யானை பீடி கம்பெனி,**

130, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு- 13

தொலைபேசி: 31651.

Registered as a News Paper at G.P.O  Regd No. QB—934

உயர் ரக நூல் வேலைகளுக்கு அனுபவம் மிக்கவர்கள் பாவிப்பது
முயல் மார்க் தையல் நூல்களே!



எல்லாத் தையல் வேலைகளுக்கும், எல்லா நிறங்களிலும்,
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,**

கொழும்பு-12

101/4 செக். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனையிலுள்ள சி. சிவஞானசுந்தரம் அவர்களால்
194 ஏ, பண்டாரநாயகா வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.